# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# வர்த்தமானப் பத்திரிகை

## 2026 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 17 ஆம் திகதிய
## பகுதி II இற்குக் குறைநிரப்பி

(2026.04.22 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)

# தேசிய சூழல் (திருத்தம்)

**1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, தேசிய சூழல் சட்டத்தைத்**
**திருத்துவதற்கானதொரு சட்டமூலம்**

சுற்றாடல் அமைச்சர் அவர்களால் பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 317.00**　　**தபாற் செலவு : ரூபா 150.00**

*இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

*சட்டப்பயன் பற்றிய கூற்று*

*வாசகம் 2* : இவ்வாசகம் (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, தேசிய சூழல் சட்டத்தின் 2 ஆம் பிரிவினைத் திருத்துகின்றதென்பதுடன் (10 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் (ந) என்னும் பந்தி) வாசகம் 6 இனால் செய்யப்பட்ட திருத்தத்திற்கான விளைவாந்தன்மையினதாகும்.

*வாசகம் 3* : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவினைத் திருத்துகின்றதென்பதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது (இதனகத்துப்பின்னர் "அதிகாரசபை" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) மத்திய சூழல் அதிகாரசபையின் உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்குமாகும்.

*வாசகம் 4* : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவினைத் திருத்துகின்றதென்பதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது (இதனகத்துப்பின்னர் "பேரவை" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) சூழல் பேரவையின் உறுப்பினர்களாக நியமிக்கப்படுவதற்கான பதவிவரிசைக்கு / பதவிநிலைக்கு குறிப்பாக ஏற்பாடு செய்வதற்குமாகும்.

*வாசகம் 5* : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவினைத் திருத்துகின்றதென்பதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது பேரவையின் அல்லது அதிகாரசபையின் ஏதேனும் கூட்டத்திற்கான கூட்ட நடப்பெண்ணை அதிகரிப்பதற்குமாகும்.

*வாசகம் 6* : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவினைத் திருத்துகின்றதென்பதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது மூலோபாய சூழல் மதிப்பீடு, திண்மக் கழிவு முகாமைத்துவம், சட்ட நடவடிக்கைகளைத் தொடருதல், விரிவாக்கப்பட்ட உற்பத்தியாளர் பொறுப்புடைமை, மற்றும் விதித்துரைக்கப்பட்ட செயற்பாடுகளைக் கண்காணித்தல் தொடர்பான அதிகாரசபை விடயங்களின் தத்துவங்கள், பணிகள், மற்றும் கடமைகளை சேர்ப்பதற்குமாகும்.

*வாசகம் 7* : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 12 ஆம் பிரிவினைத் திருத்துகின்றதென்பதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது இச்சட்டத்தின் கீழ் அத்தகைய அதிகாரசபையின் மீது வழங்கப்பட்ட ஏதேனும் பணிப்புரையையும் அத்தகைய பணிப்புரைகளுக்கு இணங்கத் தவறினால் ஏற்புடையற்பாலதான சட்டத்தடைகளையும் மேற்கொள்ள ஏதேனும் உள்ளூர் அதிகாரசபையை வலுவுறுத்துவதற்குமாகும்.

*வாசகம் 8* : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 23அ என்னும் பிரிவினைத் திருத்துகின்றதென்பதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது விதித்துரைக்கப்பட்ட செயற்பாடு ஒன்று மேற்கொள்ளப்படுவதற்கு அனுமதிக்கப்படுகின்ற இடத்தில், அத்தகைய விதித்துரைக்கப்பட்ட செயற்பாட்டை தொடங்குவதற்கு முன்னர் இடத்திற்குரிய தடைநீக்கத்தை வழங்குவதற்கும் குற்றப்பணத்தை அதிகரிப்பதற்கும் ஆகும்.

*வாசகம் 9* : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 23ஆ என்னும் பிரிவினைத் திருத்துகின்றதென்பதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது உரிமம் ஒன்றை வழங்கும் போது, சூழலுக்கான தீங்கை குறைப்பதற்கான *சரியான வழிமுறைகளைக் குறித்துரைப்பதற்கு பணிப்பாளர் தலைமையதிபதியை ஏற்பாடு செய்வதற்காகும்.*

*வாசகம் 10* : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 23இ என்னும் பிரிவினை நீக்குகின்றது.

*வாசகம் 11* : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 23ஈ என்னும் பிரிவினைத் திருத்துகின்றதென்பதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது சூழலுக்கு பாதகமாக பாதிக்க எந்தவொரு கைத்தொழில் விபத்திற்கும் அதிகாரசபையால் உரிமம் ஒன்று இல்லாதாக்கக்கூடியதான மேலதிக ஏதுவை ஏற்பாடு செய்வதற்குமாகும்.

*வாசகம் 12* : இவ்வாசகம் உரிமம் இடைநிறுத்தப்படும் அல்லது இல்லாதாக்கப்படும் காலத்தின் போது எவரேனும் ஆள் தொடர்ந்து ஒரு செயற்பாட்டை கொண்டு நடாத்துகின்றவிடத்து, உரிமம் ஒன்றை இடைநிறுத்துகின்ற அல்லது இல்லாதாக்குகின்ற கட்டளையினை உறுதிப்படுத்தும் நீதித்துறைக் கட்டளை ஒன்றுக்கு விண்ணப்பிப்பதற்கான செய்முறை ஒன்றை அறிமுகப்படுத்துவதற்கு முதன்மைச் சட்டவாக்கத்தின் 23ஈ.அ என்னும் பிரிவினை உட்புகுத்துகின்றது.

*வாசகம் 13* : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 23உ என்னும் பிரிவினைத் திருத்துகின்றதென்பதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது உரிமம் ஒன்றை வழங்குவதனை மறுப்பதற்கான மேன்முறையீடு செய்வதற்கும் வழங்கப்பட்ட காலப்பகுதியினுள் அத்தகைய மேன்முறையீட்டை விரைவாக விசாரித்து முடிவு செய்வதற்கும் ஏற்பாடு செய்வதாகும்.

*வாசகம் 14* : இவ்வாசகமானது சூழலைப் பாதுகாப்பதற்காக முதன்மைச் சட்டவாக்கத்தின் புதிய பாகம் IVஅஅ (தீங்குவிளைவிக்கும் கழிவு முகாமைத்துவம்) பாகம் IVஅஆ (இரசாயனப் பொருள் முகாமைத்துவம்) மற்றும் பாகம் IVஅஇ (சூழலுக்கு வெளியேற்றப்படும் கழிவு நீரைக் கட்டுப்படுத்துதல்) என்பவற்றை உட்புகுத்துகின்றது.

*வாசகம் 15* : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 23ஏ என்னும் பிரிவினைத் திருத்துகின்றதென்பதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது குற்றப்பணத்தை அதிகரிப்பதற்காகும்.

*வாசகம் 16* : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 23ஓ என்னும் பிரிவினைத் திருத்துகின்றதென்பதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது குற்றப்பணத்தை அதிகரிப்பதற்காகும்.

*வாசகம் 17* : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 23ங என்னும் பிரிவினைத் திருத்துகின்றதென்பதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது குற்றப்பணத்தை அதிகரிப்பதும் மற்றும் சூழலுக்கு மேலும் சேதம் ஏற்படுவதை தடுப்பதற்கு உரிமம்கொடுப்பவரினால் பொறுப்பேற்கப்படுவதற்கான சரியான வழிமுறைகளுக்கு ஏற்பாடு செய்வதும் ஆகும்.

*வாசகம் 18* : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 23ஞ என்னும் பிரிவினைத் திருத்துகின்றதென்பதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது குற்றப்பணத்தை அதிகரிப்பதற்காகும்.

*வாசகம் 19* : இவ்வாசகம் தரை அல்லது காற்று அதிர்வுகளால் விளைவிக்கப்படும் மாசினை தடுப்பதற்கும் ஏற்பாடுசெய்வதற்கும் மற்றும் மீறுகைக்கான குற்றப்பணம் மற்றும் மறியற்றண்டனைக்கு ஏற்பாடு செய்வதற்கு என முதன்மைச் சட்டவாக்கத்தின் 23ஞஅ என்னும் புதிய பிரிவினை உட்புகுத்துகின்றது.

*வாசகம் 20* : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 23ந என்னும் பிரிவினைத் திருத்துகின்றதென்பதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது குற்றப்பணத்தை அதிகரிப்பதற்காகும்.

*வாசகம் 21* : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 23ப என்னும் பிரிவினைத் திருத்துகின்றதென்பதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது குறித்தசில செயற்பாட்டை தடைசெய்வதற்கும் இயைபான குற்றப்பணத்திற்கு ஏற்பாடு செய்வதற்கும் மற்றும் மூடுவதற்கான கட்டளையை வழங்குவதற்கு முன்னர் பாதிக்கப்பட்ட ஆளுக்கு நீதிவான் முன்னர் விசாரிக்க ஒரு வாய்ப்பை வழங்குவதற்கும் அமைச்சரின் வரம்பை விரிவாக்குவதாகும்.

*வாசகம் 22* : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 23பஅ என்னும் புதிய பிரிவானது பிரிவு 23ம வின் கீழ் தடைசெய்யப்பட்ட ஏதேனும் உற்பத்திபொருளை அல்லது மூலப்பொருளை கட்டுக்காப்பில் எடுப்பதற்கு அல்லது பறிமுதல் செய்வதற்கு பணிப்பாளர் தலைமையதிபதிக்கு தத்துவமளிப்பதாகும்.

*வாசகம் 23* : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 23அஅ என்னும் பிரிவினைத் திருத்துகின்றதென்பதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது கருத்திட்டத்தை அங்கீகரிக்கின்ற முகவராண்மைகளை நியமிப்பதற்கு பணிப்பாளர் தலைமையதிபதிக்கு அதிகாரமளிப்பதாகும்.

*வாசகம் 24* : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 23ஆஆ என்னும் பிரிவினைத் திருத்துகின்றதென்பதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது கருத்திட்டம் ஒன்றை அங்கீகரிப்பதற்கு முன்னர் விண்ணப்பகாரரினால் விதித்துரைக்கப்பட்ட தரநியமங்கள் மற்றும் கட்டளைக்கல் என்பவற்றின் இணங்குகை அளவைக் கவனத்திற் கொண்டு கருத்திட்டத்தை அங்கீகரிக்கின்ற முகவராண்மைக்கு ஏற்பாடு செய்வதற்குமாகும்.

*வாசகம் 25* : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 23ஈஈ என்னும் பிரிவினைத் திருத்துகின்றதென்பதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது நிபந்தனைகளின் ஏதேனும் மீறுகை காரணமாக ஏதேனும் அங்கீகாரத்தை இல்லாதாக்கு வதற்கான அதிகாரசபைக்கும் அத்துடன் செயலாளருக்கும் மேன்முறையீடு செய்வதற்கு இடருற்ற திறத்தவருக்கும் ஏற்பாடு செய்வதாகும்.

*வாசகம் 26* : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 23ளள, 23ஏஏ மற்றும் 23ஒஒ என்னும் புதிய பிரிவுகளை உட்புகுத்துகின்றது என்பதுடன் பின்வருவனவற்றுக்கு ஏற்பாடுசெய்வதற்குமாகும்-

(i) விதித்துரைக்கப்பட்ட கருத்திட்டங்கள் தொடர்பான தவறுகளுக்கான தண்டனை

(ii) எந்த கருத்திட்டங்களுக்காக சூழல் தாக்க மதிப்பீடு தேவைப்படுகின்றதோ அந்த கருத்திட்டங்களுக்காக கருத்திட்டத்தை அங்கீகரிக்கும் முகவராண்மைக்கு சூழல் முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்பு திட்டத்தை சமர்ப்பித்தல்; அத்துடன்

(iii) எந்தக் கருத்திட்டங்களுக்கு ஆரம்ப சூழல் பரீட்சிப்பு அறிக்கை தேவைப்படுகின்றதோ அந்தக் கருத்திட்டங்களுக்காக கருத்திட்டத்தை அங்கீகரிக்கும் முகவராண்மைக்கு பருவகால அறிக்கைகளை சமர்ப்பித்தல்.

*வாசகம் 27* : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தில் புதிய பாகம் IVஈ (மூலோபாய சூழல் மதிப்பீடு), பாகம் IVஉ (ஈரநிலங்களைப் பாதுகாத்தல்), பாகம் IVஊ (விரிவாக்கப்பட்ட உற்பத்தியாளர் பொறுப்பு), பாகம் IVஎ (தவறுகளும் தண்டங்களும்) என்பனவற்றை உட்புகுத்துகின்றது.

*வாசகம் 28* : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 24அ என்னும் பிரிவினைத் திருத்துகின்றதென்பதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது ஏதேனும் பரீட்சிப்புக்காக அல்லது சோதனைக்காக எவையேனும் வளவுகளுக்குள் நுழைந்து சோதனை செய்வதற்கான அதிகாரசபையின் தத்துவங்களை விரிவாக்குவதாகும்.

*வாசகம் 29* : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 24அஅ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துகின்றது. இது சூழலுக்கான பாதகமான தாக்கங்கள் குறித்து அறிக்கை ஒன்றை தேவைப்படுத்துகின்ற ஏதேனும் அரச நிறுவனத்திற்கு ஏதேனும் விடயத்தை ஆற்றுப்படுத்துவதற்கு பணிப்பாளர் தலைமையதிபதிக்கு அதிகாரமளிக்கின்றது.

*வாசகம் 30* : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 24ஆ என்னும் பிரிவினைத் திருத்துகின்றதென்பதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது பாகம் IVஅ, பாகம் IVஅஅ, பாகம் IVஅஆ, மற்றும் பாகம் IVஅஇ ஆகியவற்றின் கீழ் விதித்துரைக்கப்பட்ட செயற்பாடொன்றை செய்கின்ற எவரேனும் ஆளுக்கு பணிப்புரைகளை வழங்க பணிப்பாளர் தலைமையதிபதிக்கு தத்துவமளிப்பதாகும்.

*வாசகம் 31* : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 24ஆஆ என்னும் புதிய பிரிவினை உட்புகுத்துகின்றது; இதன் மூலம் நீதிவானிற்கு பணிப்பாளர் தலைமையதிபதி விண்ணப்பத்தை செய்வதன் மூலம் சூழலிற்கு தீங்குவிளைவிக்கின்றதான அதிகாரமளிக்கப்படாத நிருமாணங்களை அகற்றுவதற்கு ஏற்பாடு செய்வதாகும்.

*வாசகம் 32* : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 24இ என்னும் பிரிவினைத் திருத்துகின்றதென்பதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது சூழல் பாதுகாப்பு இடப்பரப்பினுள் அமைச்சரினால் வழங்கப்பட்ட ஏதேனும் கட்டளையை மீறிச் செய்யப்பட்ட ஏதேனும் செயற்பாட்டுக்காக குற்றப்பணம் மற்றும் மறியற்றண்டனை ஒன்றுக்கு ஏற்பாடு செய்வதாகும்.

*வாசகம் 33* : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 24இஇ என்னும் புதிய பிரிவினை உட்புகுத்துகின்றதென்பதுடன் சேதங்களை மதிப்பீடு செய்வதற்கும் நீதிவான் முன்னர் வழக்கை தொடருவதன் மூலம் பொறுப்புடைய திறத்தவரிடமிருந்து அத்தகைய செலவுத்தொகையை அறவிடுவதற்கும் ஏற்பாடு செய்வதாகும்.

*வாசகம் 34* : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 24ஈ என்னும் பிரிவைத் திருத்துகின்றதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் கட்டளையானது முதன்மைச் சட்டவாக்கத்தில் உள்ள பிழையை சரி செய்தலாகும்.

*வாசகம் 35* : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 27 ஆம் பிரிவினைத் திருத்துகின்றதென்பதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது அதிகாரசபையின் அலுவலர்கள், உறுப்பினர்கள் மற்றும் ஊழியர்களை பகிரங்க சேவையாளர்களாக ஏற்பாடு செய்வதாகும்.

*வாசகம் 36* : இவ்வாசகம் பாகம் IVஆ வின் கீழான எல்லாத் தவறுகளும் பிடியாணையின்றிக் கைதுசெய்தகு தவறுகளாக இயலச் செய்வதற்கு முதன்மைச் சட்டவாக்கத்தில் 27அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துகின்றது.

*வாசகம் 37* : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 28 ஆம் பிரிவினைத் திருத்துகின்றதென்பதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது அதிகாரசபையானது 2023 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க ஊழல் எதிர்புச் சட்டத்தின் கருத்தெல்லைக்குள் அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனம் ஒன்றாக இருப்பதாக ஏற்பாடு செய்வதாகும்.

*வாசகம் 38* : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 31 ஆம் பிரிவினை நீக்குகின்றது என்பதுடன் (பாகம் IVஎ) 27 ஆம் பிரிவிற்கு செய்யப்பட்ட திருத்தத்துக்கான விளைவாந்தன்மையினதாகும்.

*வாசகம் 39* : இவ்வாசகம் ஆட்கள் குழுவினால் புரியப்பட்ட தவறுகளை உள்ளடக்கு வதற்கு முதன்மைச் சட்டவாக்கத்தில் 31அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துகின்றது.

*வாசகம் 40* : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 32 ஆம் பிரிவினைத் திருத்துகின்றதென்பதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது தீங்குவிளைவிக்கும் பதார்த்தங்களை பயன்படுத்துவது பற்றியும் அத்தகைய பதார்த்தங்களை பதிவுசெய்தல் மற்றும் கண்காணித்தல் பற்றியதுமான தடைசெய்தல் அல்லது மட்டுப்படுத்தல் தொடர்பில் அமைச்சர் ஒழுங்குவிதிகளை ஆக்குவதற்கு ஏற்பாடு செய்வதாகும்.

*வாசகம் 41* : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 33 ஆம் பிரிவினைத் திருத்துகின்றதென்பதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது புதிய பதங்கள் மற்றும் சொல்லமைப்புகளை பொருள்கோடல் செய்வதற்கு ஏற்பாடு செய்வதாகும்.

ச.வ. ஓ. 48/2025

## 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, தேசிய சூழல் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளு மன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

**1.** இச்சட்டம், 2026 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, தேசிய சூழல் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்

**2.** (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, தேசிய சூழல் சட்டத்தின் 2 ஆம் பிரிவு, (1) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:- 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, சட்டத்தின் 2 ஆம் பிரிவைத் திருத்துதல்

"(1) மத்திய சூழல் அதிகாரசபை எனவழைக் கப்படும் அதிகாரசபையொன்று தாபிக்கப்படுதல் வேண்டும்.".

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவு, அதன் (1) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:- முதன்மைச் சட்டவாக்கத் தின் 3 ஆம் பிரிவைத் திருத்துதல்

"(1) அதிகாரசபை, பின்வருமாறாக ஐந்து உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) (இதனகத்துப்பின்னர் "அமைச்சர்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) சூழல் என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரினது அமைச்சின் மேலதிக செயலாளரொருவராக இருக்கவேண்டிய பதவிவழி உறுப்பினரொருவர்; அத்துடன்

(ஆ) அமைச்சரின் கலந்தாலோசனையுடன் சனாதிபதியினால் நியமிக்கப்பட்ட பின்வரும் நான்கு உறுப்பினர்கள் :-

(i) அவர்களுள் மூவர், சூழல் முகாமைத்துவத் துறையில் பத்தாண்டுகளுக்குக் குறையாத நிபுணத்துவத்தையும் தகைமை களையும் கொண்டிருத்தல் வேண்டும்; அத்துடன்

(ii) அவர்களுள் ஒருவர், நிருவாகத் திலான தகைமைகளையும் மற்றும் சூழல் முகாமைத்துவத் துறையில் அனுபவத்தையும் கொண்டிருத்தல் வேண்டும்.”.

முதன்மைச் சட்டவாக்கத் தின் 7 ஆம் பிரிவைத் திருத்துதல்

**4.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவு, அதன் (1) ஆம் உட்பிரிவில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அதன் பந்தி (அ) இலிருந்து தொடங்கி பந்தி (த) வரையிலான எல்லாப் பந்திகளிலும் “சிரேட்ட அலுவலர் ஒருவர்” என்னும் சொற்களுக்குப் பதிலாக “சிரேட்ட உதவிச் செயலாளர் எனும் பதவிவரிசைக்குக் குறையாத அலுவலர் ஒருவர்” என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(2) அவ்வுட்பிரிவின் (ந) என்னும் பந்தியில் “சிரேட்ட அலுவலர் ஒருவர்” என்னும் சொற்களுக்குப் பதிலாக “பணிப்பாளர் ஒருவர்” என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(3) அவ்வுட்பிரிவின் (ம) என்னும் பந்தியில், “ஏழு உறுப்பினர்கள்; அத்துடன்” என்னும் சொற்களுக்குப் பதிலாக “ஏழு உறுப்பினர்கள்;” என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(4) அவ்வுட்பிரிவின் (ய) என்னும் பந்தியில், “இரண்டு உறுப்பினர்கள்.” என்னும் சொற்களுக்குப் பதிலாக “இரண்டு உறுப்பினர்கள்;” என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(5) அவ்வுட்பிரிவின் (ய) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் பந்திகளைச் சேர்ப்பதன் மூலமும்:-

"(ர) அமைச்சின் ஒரு மேலதிகச் செயலாளர் எனும் பதவி வரிசைக்குக் குறையாத அலுவலர் ஒருவர்;

(ல) 2008 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, கடல்சார் தீழ்ப்புத் தடைச் சட்டத்தின் 16 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபையின் பொது முகாமையாளர் அல்லது அவரினால் பெயர்குறித்து நியமிக் கப்பட்ட முகாமையாளர் எனும் பதவிவரிசைக்குக் குறையாத அலுவலர் ஒருவர்;

(வ) (451 ஆம் அத்தியாயமான) காடு பேணற் கட்டளைச்சட்டத்தின் 58 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப் பட்ட காடு பேணுநர் தலைமை யதிபதி அல்லது அவரினால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட காடு பேணுநர் எனும் பதவி வரிசைக்குக் குறையாத அலுவலர் ஒருவர்;

(அஅ) (469 ஆம் அத்தியாயமான) தாவர மற்றும் விலங்கின பாதுகாப்புக் கட்டளைச்சட்டத்தின் 68 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் பணிப்பாளர் தலைமையதிபதி அல்லது அவரினால் பெயர்குறித்து நியமிக் கப்பட்ட பணிப்பாளர் எனும் பதவிவரிசைக்குக் குறையாத அலுவலர் ஒருவர்; அத்துடன்

(அஆ) 1981 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க, கரையோரம் பேணல் மற்றும் கரையோர வளங்கள் முகாமைத்துவச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் நியமிக்கப்பட்ட கரையோரம் பேணல் மற்றும் கரையோர வளங்கள் முகாமைத்துவ திணைக்களத்தின் பணிப்பாளர் தலைமையதிபதி அல்லது அவரினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட பணிப்பாளர் எனும் பதவிவரிசைக்குக் குறையாத அலுவலர் ஒருவர்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவைத் திருத்துதல்

**5.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவு, அப்பிரிவின் (14) ஆம் உட்பிரிவில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியில், "இரண்டு" என்னும் சொல்லுக்குப் பதிலாக "மூன்று" என்னும் சொல்லை இடுவதன்மூலமும்; அத்துடன்

(2) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் "ஏழு" என்னும் சொல்லுக்குப் பதிலாக, "ஒன்பது" என்னும் சொல்லை இடுவதன்மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவைத் திருத்துதல்

**6.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (ஏ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன்மூலமும்:

"(ஏஅ) விதித்துரைக்கப்படக்கூடியவாறான முறையில் தற்போதுள்ள கொள்கைகள், மூலோபாயங்கள், திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்கள் என்பவற்றுக்குச் செய்யப்பட்ட புதிய கொள்கைகள்,

மூலோபாயங்கள், திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பில் மூலோபாய சூழல் மதிப்பீடுகளை நிறைவேற்றுமாறு தேவைப்படுத்துதல்;" ;

(2) அவ்வுட்பிரிவின் (ஐ) என்னும் பந்தியில் -

(அ) அத்தகைய பந்தியில் "விதப்புரை" என்னும் சொல் காணப்படும் இடங்களிலெல்லாம் அச்சொல்லுக்குப் பதிலாக "பணிப்பு" என்னும் சொல்லை இடுவதன்மூலமும்;

(ஆ) அப்பந்தியின் (vii) ஆம் உட் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பந்தியை உட்புகுத்துவதன் மூலமும்:-

"(viii) திண்மக்கழிவுப் பயன் பாட்டின் மிகவும் பயனுள்ள முறையினது நியதிகளின் படி கழிவுகளைக் குறைத்தல், கழிவுகளை வேறுபிரித்தல், கழிவுகளை மாற்றுதல், அல்லது பரிகரித் தல், செயன்முறைப்படுத்தல் மற்றும் இறுதியாக அகற்றுதல் என்பவற்றுக்கான வழி முறைகளுட்பட முறையான திண்மக்கழிவு முகாமைத்துவம்;";

(இ) அப்பந்தியின் (Viii) என்னும் புதிய உட்பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட் புகுத்துவதன்மூலமும்:-

"(ஐஅ) இச்சட்டத்தின் ஏற்பாடு களுக்கு அல்லது இச்சட்டத் தின் நியதிகளின்படி அதிகார சபையினால் ஏதேனும்

உள்ளூரதிகாரசபைக்கு கொடுக்கப்பட்ட ஏதேனும் பணிப்புக்கு இணங்கியொழுகத் தவறுகின்ற அல்லது அவற்றை மீறுகின்ற ஏதேனும் உள்ளூரதிகாரசபைக்கெதிராக நீதிவான் நீதிமன்றத்தில் வழக்கு நடவடிக்கைகளைத் தொடுத்தல்;";

(3) பந்தி (ண) இல், "மற்றும் பயன்கொடுத்தல்." என்னும் சொற்களுக்குப் பதிலாக "மற்றும் பயன்கொடுத்தல்;" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(4) அப்பிரிவின் (ண) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்திகளை உட்புகுத்துவதன்மூலமும்:-

"(த) ஒன்றில் சுயாதீனமாக அல்லது வேறு எவரேனுமாளுடன் ஒருமித்து, விதித்துரைக்கப்பட்ட பண்டங்கள் அல்லது உற்பத்திகள் தொடர்பில் விரிவாக்கப்பட்ட உற்பத்தியாளர் பொறுப்புடைமைக்கான பொறிமுறையொன்றை நடைமுறைப்படுத்தல்;

(ந) அதிகாரசபையின் ஒருப்பாட்டுக் கமைய, இச்சட்டம் தவிர்ந்த ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் எச்செயற்பாட்டுக்காக உரிமமொன்று அளிக்கப்பட்டுள்ளதோ விதித்துரைக்கப்பட்ட அச்செயற்பாடு எதனையும் கண்காணித்தல் மற்றும் அத்தகைய விதித்துரைக்கப்பட்ட செயற்பாட்டின் போது இச் சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டை மீறுகின்ற முறையொன்றில் அத்தகைய செயற்பாட்டில் ஈடுபட்ட எவரேனும் ஆளுக்கெதிராக நீதிவான் நீதிமன்றத்தில் குற்றவழக்குத் தொடுத்தல்; அத்துடன்

(ப) வேறேதேனும் எழுத்திலான சட்டத்தினால் அல்லது சட்டத்தின்கீழ் அதிகாரசபைக்கு உரித்தாக்கப்பட்ட ஏதேனும் கடமையை, பணியை அல்லது தத்துவத்தைச் செய்தல், புரிதல் அல்லது நிறைவேற்றுதல்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 12 ஆம் பிரிவைத் திருத்துதல்

**7.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 12 ஆம் பிரிவு, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவுகளைச் சேர்ப்பதன்மூலம் இத்தால் திருத்தப் படுகின்றது:-

"(3) இயைபான உள்ளூர் அதிகாரசபை இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அல்லது (1) ஆம் உட்பிரிவின்கீழ் அதற்கு வழங்கப்பட்ட ஏதேனும் பணிப்புக்கு இணங்கியொழுகத் தவறுகின்றவிடத்து அல்லது அவற்றை மீறுகின்றவிடத்து அதிகாரசபையின் தவிசாளர் அல்லது பணிப்பாளர் தலைமையதிபதி நியாயாதிக்கத்தைக் கொண்டுள்ள நீதிவானுக்கு விண்ணப்பமொன்றைச் செய்யலாம். அத்தகைய விண்ணப்பம் ஒவ்வொன்றும் வலுவுறுத்துகைக்கான பணிப்புரை ஒன்றுடன் சேர்த்து தவிசாளர் அல்லது பணிப்பாளர் தலைமையதிபதியின் சத்தியக் கடுதாசியொன்றினால் ஆதாரப்படுத்தப்படல் வேண்டும். இதன்மூலம், அத்தகைய உள்ளூர் அதிகாரசபைக்கு அதிகாரசபையினால் வழங்கப்பட்ட பணிப்புகளுக்கு இணங்கியொழுகுவதற்கு அதற்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்படுகின்றன.

(4) உள்ளூர் அதிகாரசபையின்பால் சார்த்தப் பட்ட தவறுதல் உண்மையில் இடம்பெற்றதென விசாரணையொன்றின்மேல் நீதிவான் திருப்திப் படுமிடத்து, நீதிவானானவர் வலுவுறுத்துகைக்கான பணிப்புரைக்கு இணங்கியொழுகும்படி சம்பந்தப்பட்ட உள்ளூர் அதிகாரசபையைப் பணிக்கின்ற கட்டளை யொன்றை வழங்குதல் வேண்டும். அத்தகைய இணங்கியொழுகுகைக்கு அவசியமானவாறான காலப் பகுதியை அக்கட்டளை குறித்துரைத்தல் வேண்டும்.

(5) வலுவுறுத்துகைக்கான பணிப்புரை ஒவ்வொன்றும் சான்றில் ஏல்தகவுடையதாக இருத்தல்

வேண்டுமென்பதுடன் அதன்கண் கூறப்பட்ட நிகழ்வுகளின் முதற்தோற்ற எண்பிப்பாதலும் வேண்டும்.

(6) சம்பந்தப்பட்ட உள்ளூர் அதிகாரசபை அத்தகைய கட்டளைக்கு இணங்கியொழுகத் தவறுகின்ற விடத்து அல்லது கவனயீனமாகவுள்ளவிடத்து அத்தகைய அதிகாரசபை 23 ணண என்னும் பிரிவின் கீழான தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.".

**8.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 23அ என்னும் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:- முதன்மைச் சட்டவாக்கத்தின் 23 அ என்னும் பிரிவைத் திருத்துதல்

(1) அப்பிரிவின் (1) ஆம் மற்றும் (2) ஆம் உட்பிரிவுகளை நீக்கிவிட்டு அவற்றுக்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவுகளை இடுவதன்மூலமும்:-

"(1) அமைச்சர் –

(அ) சூழலிற்குள் கழிவை வெளியேற்றுவதில், படிய வைப்பதில் அல்லது வெளிவிடுவதில் ஈடுபடுகின்ற அல்லது அவற்றை விளைவிக்கின்ற அத்துடன் அத்தகைய வெளியேற்றுகை, படியவைப்பு அல்லது வெளிவிடுகை தீழ்ப்பை ஏற்படுத்துகின்ற; அல்லது

(ஆ) சூழலிற்குள் கழிவை வெளியேற்றுவதில்,படியவைப்பதில் அல்லது வெளிவிடுவதில் ஈடுபடாத அல்லது அவற்றை விளைவிக்காத ஆனால் அத்தகைய செயற்பாட்டை நிறைவேற்றுதலானது சூழலின் பயன்மிகு உபயோகத்துக்குத் தன்னளவில் தீங்கு விளைவிக்கின்ற,

(இதனகத்துப்பின்னர் "விதித்துரைக்கப்பட்ட செயற்பாடுகள்" எனக் குறிப்பீடு செய்யப் படுகின்றதுமான) எச்செயற்பாடுகளுக்கு உரிமமொன்று தேவைப்படுத்தப்படு கின்றதோ அச்செயற்பாடுகளை வர்த்தமானி யில் வெளியிடப்படும் கட்டளைமூலம் தீர்மானித்தல் வேண்டும்.

(2) ஆளொருவர் –

(அ) உட்பிரிவு 2அ இன் நியதிகளின்படி அளிக்கப்பட்ட இடத்துக்குரிய தடை நீக்கத்துக்கமைய, பணிப்பாளர் தலைமையதிபதியினால் அல்லது பணிப்பாளர் தலைமையதிபதி யினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலரினால் வழங்கப்பட்ட உரிமமொன்றின் அதிகாரத்தின் கீழன்றி; அத்துடன்

(ஆ) விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய நியதிகள், நிபந்தனைகள் மற்றும் நியமங்களுக்கு இணங்க வன்றி,

ஏதேனும் விதித்துரைக்கப்பட்ட செயற் பாட்டைக் கொண்டுநடாத்துதலாகாது.

(2அ) ஏதேனும் விதித்துரைக்கப் பட்ட செயற்பாட்டை நிறைவேற்றுவதற்கு உட்கருதுகின்ற விண்ணப்பகார ரொருவர் இடத்துக்குரிய தடை நீக்கத் துக்கான அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கென தொடக்கத்தில் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு விண்ணப்பமொன்றைச் செய்தல் வேண்டும். பணிப்பாளர் தலைமையதிபதி அத்தகைய நோக்கத்துக்காகப் பெயர் குறித்தளிக்கப்பட்ட அலுவலர் ஒருவருக்கு அத்தகைய விண்ணப்பத்தை அனுப்புதல்

வேண்டும்; அவ்வலுவலர், இடத்தைப் பார்வையிட்டு விதித்துரைக்கப்பட்ட முறையில் அறிக்கையொன்றைத் தயாரித்தலும் வேண்டும். பணிப்பாளர் தலைமையதிபதி அல்லது அவரினால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர், அறிக் கையைக் கவனத்துட்கொண்டும் எழுத்தில் பதிவுசெய்யப்பட்ட காரணங்களுக்காகவும் இடத்துக்குரிய தடைநீக்கத்துக்கான விண்ணப்பத்தை அங்கீகரித்தல் அல்லது நிராகரித்தல் வேண்டும்.

(2ஆ) விண்ணப்பகாரரொருவர், இடத்துக்குரிய தடைநீக்கத்தைப் பெற்றுக் கொண்டிருந்தாலொழிய, அவ்விடத்தில் நிர்மாணிப்பு எதனையும் தொடங்கு தலாகாது.

(2இ) இடத்துக்குரிய தடைநீக்கம் ஒவ்வொன்றும், அத்தகைய தடை நீக்கத்தின் தேதியிலிருந்து பன்னிரெண்டு மாதங்களைவிட அதிகமாகவிராத காலப் பகுதியொன்றுக்குச் செல்லுபடியாதல் வேண்டும். இடத்துக்குரிய தடைநீக்கம் எதுவும், அதுசார்பில் பணிப்பாளர் தலைமையதிபதிக்கும் செய்யப்படும் விண்ணப்பம் என்ற வகையின்மூலம் பன்னிரெண்டு மாதங்களைக்கொண்ட மேலதிக காலப்பகுதியொன்றுக்குப் புதுப்பிக்கப்படலாம்.";

(2) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில் –

(அ) "இப்பிரிவின் (2) ஆம் உட் பிரிவுக்கு முரணாக ஏதேனும் விதித்துரைக்கப்பட்ட செயற் பாட்டினைக் கொண்டு நடாத்து கின்ற ஆள் ஒவ்வொருவரும் தவ

றொன்றுக்கு குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல்-” “என்னும் சொற்களுக்குப் பதிலாக, “இப்பிரிவின் (2) அல்லது (2ஒ) என்னும் உட்பிரிவுகளுக்கு முரணாக ஏதேனும் விதித்துரைக்கப்பட்ட செயற்பாட்டினைக் கொண்டு நடாத்துகின்ற ஆள் ஒவ்வொருவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் நியாயாதிக் கத்தைக் கொண்டுள்ள நீதிவான் ஒருவர்முன் குற்றத்தீர்ப்பளிக்கப் பட்டதன்மேல்-” என்னும் சொற் களை இடுவதன்மூலமும்; அத்துடன்

(ஆ) அதன் (அ) என்னும் பந்தியில், “பத்தாயிரம் ரூபாவுக்குக் குறையாத” என்னும் சொற்களுக்குப் பதிலாக, “ஐம்பதாயிரம் ரூபாவுக்குக் குறையாததும் இருபது மில்லியன் ரூபாவை விஞ்சாததுமான” என்னும் சொற்களை இடுவதன்மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 23 ஆ என்னும் பிரிவைத் திருத்துதல்

**9.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 23ஆ என்னும் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில், "விதித்துரைக்கப்படக் கூடியவாறான" என்னும் சொல்லுக்குப் பதிலாக, "காலத்துக்குக்காலம் விதித்துரைக் கப்படக்கூடியவாறான" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட் பிரிவுகளைச் சேர்ப்பதன்மூலமும்:-

"(3) விதித்துரைக்கப்பட்ட ஒரு செயற்பாட்டுக்கான உரிமமொன்றை

வழங்கும்போது பணிப்பாளர் தலைமை யதிபதி, சூழலுக்கு ஏற்படக்கூடிய சாத்தியத்தைக் கொண்டுள்ள ஏதேனும் சேதத்தைக் குறைப்பதற்கும் மற்றும் சூழலைப் பாதுகாப்பதற்கான போதிய பாதுகாப்புக்களை வழங்குவதற்கும் எடுக்கப்படுவதற்குத் தேவைப்படுத்தப்பட்ட சரிசெய்யும் நடவடிக்கைகளைக் குறித்துரைத்தல் வேண்டும்.

(4) பணிப்பாளர் தலைமையதிபதி அல்லது பணிப்பாளர் தலைமையதிபதி யினால் அதிகாரமளிக்கப்பட்ட எவ ரேனும் அலுவலர், இப்பிரிவில் உள்ளடங் கியுள்ள ஏற்பாடுகளைக் கவனத்துட் கொண்டு, விண்ணப்பதாரர் தேவைப் படுத்தப்படக்கூடியவாறான அத்தகைய நடவடிக்கைகளையும் பாதுகாப்புக்களை யும் எடுப்பதற்கான ஆற்றலைக் கொண்டுள்ளா ரெனத் திருப்திப்படுவதன் மேல் (1) ஆம் உட்பிரிவில் குறித்துரைக் கப்பட்டவாறாக விண்ணப்பகாரருக்கு உரிமமொன்றை வழங்குதல் வேண்டும்.

(5) பணிப்பாளர் தலைமையதிபதி அல்லது பணிப்பாளர் தலைமையதிபதியினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலர், உரிமமொன்றுக்கான அல்லது உரிம மொன்றைப் புதுப்பிப்பதற்கான விண்ணப்ப காரரொருவர் இப்பாகத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுவதற்கான அல்லது தேவைப்படுத்தப்படக்கூடியவாறான அத்தகைய நடவடிக்கைகளை அல்லது பாதுகாப்புக்களை எடுப்பதற்கான ஆற்றலைக் கொண்டிருக்கவில்லையென நம்புவதற்கான காரணத்தைக் கொண்டுள்ள விடத்து, கொடுக்கப்பட்ட காரணங் களுக்காக விண்ணப்பகாரரின் விண்ணப்பம்

நிராகரிக்கப்பட்டுள்ளதென விண்ணப்பகாரருக்கு அறிவித்தல் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 23 இ என்னும் பிரிவை நீக்குதல்*

**10.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 23இ என்னும் பிரிவு இத்தால் நீக்கப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 23 ஈ என்னும் பிரிவை மாற்றீடு செய்தல்*

**11.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 23ஈ என்னும் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு, அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:-

"*உரிமத்தை இடைநிறுத்தி வைத்தல் அல்லது இல்லாதாக்குதல்*

23ஈ. இப்பாகத்தின் கீழ் எவரேனும் ஆளுக்கு உரிமமொன்று வழங்கப்பட்டிருந்து அத்தகைய ஆள் இச்சட்டத்தின் ஏற்பாடுகளை அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியை அல்லது உரிமத்தின் எவையேனும் நியதிகளை, நியமங்களை மற்றும் நிபந்தனைகளை மீறிச் செயலாற்றுமிடத்து, அல்லது உரிமம் வழங்கப்பட்டதிலிருந்து பெறும் சூழலானது இயற்கைக் காரணிகளால் அல்லது வேறு வகையாக மாற்றப்பட்டுள்ளவிடத்து அல்லது மாறியுள்ளவிடத்து, அல்லது உரிமமொன்றின் அதிகாரத்தின்கீழ் சூழலினுள் கழிவைத் தொடர்ந்து வெளியேற்றுதல், படியவிடுதல் அல்லது வெளிவிடுதலானது நன்மை பயக்கும் பயன்பாடெதனையும் பாதகமாகப் பாதிக்குமிடத்து அல்லது பாதிக்கக்கூடியதாக இருக்குமிடத்து அல்லது உரிமம் பெற்றவர் சூழல்மீதான பாதகமான விளைவொன்றை ஏற்படுத்துகின்ற அல்லது ஏற்படுத்தும் சாத்தியம் கொண்ட ஏதேனும் கைத்தொழில் சார் விபத்தொன்றைத் தடுப்பதற்குத் தவறுகின்றவிடத்து பணிப்பாளர் தலைமையதிபதி

அல்லது பணிப்பாளர் தலைமையதி பதியினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலர், கட்டளை மூலம், அத்தகைய கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் காலப்பகுதிக்கு அத்தகைய உரிமத்தை இடைநிறுத்தலாம் அல்லது அதனை இல்லா தாக்கலாம்.".

முதன்மைச் சட்டவாக்கத் தின் 23 ஈஅ என்னும் புதிய பிரிவை உட்புகுத்தல்

**12.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 23ஈ என்னும் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு உட்புகுத்தப்படுவதுடன் அச்சட்டவாக்கத்தின் 23ஈஅ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்.

"இடைநிறுத்தப் பட்ட அல்லது இல்லாதாக்கப்பட்ட உரிமம் ஒன்றுக்கு 23 அ என்னும் பிரிவின் ஏற்புடைமை

23ஈஅ. எவரேனுமாள், 23ஈ என்னும் பிரிவின்கீழ் உரிமமொன்றின் இடைநிறுத்துகை அல்லது இல்லாதாக்குகை முடிவுறாதிருக்கும்போது செயற்பாடொன்றைத் தொடர்ச்சியாகக் கொண்டுநடாத்துமிடத்து, அத்தகைய ஆள் தொடர்பில் 23அ என்னும் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகள் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.”.

முதன்மைச் சட்டவாக்கத் தின் 23 உ என்னும் பிரிவைத் திருத்துதல்

**13.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 23உ என்னும் பிரிவு, அதன் (2) ஆம் உட்பிரிவில், அவ்வுட்பிரிவின் தொடக்கத்தில் "ஓராம்உட்பிரிவில்குறித்துரைக்கப்பட்டமேன்முறையீடானது அத்தகைய மேன்முறையீடு பெறப்பட்டதிலிருந்து முப்பது நாட்களுக்குள் முடிவுறுத்தப்படுதல் வேண்டும்." என்னும் சொற்களைச் சேர்ப்பதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தில் IV அஅ, IV அஅஅ மற்றும் IV அஅஅஅ என்னும் புதிய பாகங்களை உட்புகுத்துதல்

**14.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 23உ என்னும் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பாகங்கள் உட்புகுத்தப் படுகின்றன என்பதுடன் அவை அதன் பாகம் IV அஅ (பிரிவுகள் 23ஊ, 23ஊஅ, 23ஊஆ, 23ஊஇ, 23ஊஈ), பாகம் IV அஆ (பிரிவு 23ஊஉ) மற்றும் பாகம் IV அஇ (பிரிவுகள் 23ஊஊ, 23ஊஎ மற்றும் 23ஊஏ) என்றவாறாகப் பயனுறுதலும் வேண்டும்:-

## "பாகம் IV அஅ
## தீங்குவிளைவிக்கும் கழிவு முகாமைத்துவம்

அமைச்சர் தீங்கு விளைவிக்கும் கழிவு முகாமைத்துவத்துக் கான உரிமம் ஒன்றை வழங்கு வதனைத் தீர்மானித்தல்

23ஊ.(1) அமைச்சர், வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம், (இதனகத்துப் பின்னர் "விதித்துரைக்கப்பட்ட தீங்குவிளைவிக்கும் கழிவு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) தீங்கு விளைவிக்கும் கழிவு பற்றிய நிரல்களை வகுதிகளாகக் குறித்துரைக்கலாம். அமைச்சர், அத்தகைய விதித்துரைக்கப்பட்ட தீங்குவிளைவிக்கும் கழிவினது முறையான முகாமைத்துவத்துக்கு அவசியமான நடவடிக்கைமுறை களையும் மற்றும் கட்டளைக் கற்களையும் விதித்துரைக்கலாம்.

(2) ஒரு செயலிடத்தை, கைத்தொழிலை அல்லது வர்த்தகச் செயற்பாட்டைக் கொண்டுநடாத்துகின்ற ஆளெவரும் –

(அ) பணிப்பாளர் தலைமையதிபதியின் கைப்பட வழங்கப்பட்ட உரிம மொன்றின் அதிகாரத்தின்கீழ் தவிர; அத்துடன்

(ஆ) விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய நியதிகள், நிபந்தனை கள், நியமங்கள் அல்லது வேறு கட்டளைக்கற்களுக்கு இணங்கவும் தவிர,

அத்தகைய விதித்துரைக்கப்பட்ட தீங்குவிளைவிக்கும் கழிவைத் தோற்றுவித்தல், கையாளுதல் அல்லது முகாமை செய்தல் ஆகாது.

(3) நான்காம் உட்பிரிவுக்கமைய, (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளை மீறிச்செயலாற்றுகின்ற எவரேனுமாள் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் நீதிவானொருவரின்

முன்னரான சுருக்க விளக்கமொன்றின் பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் –

(அ) இருபது மில்லியன் ரூபாவுக்கு மேற்படாத குற்றப்பண மொன்றுக்கும் அத்துடன் தொடர்ச்சியான தவறொன்றின் விடயத்தில் குற்றத்தீர்ப்பின் பின்னர் தவறானது எத்தினத்தில் தொடர்கின்றதோ அத்தினம் ஒவ்வொன்றுக்கும் ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபாவுக்கு மேற்படாத குற்றப்பணமொன்றுக்கும் மற்றும் இரண்டாண்டுகளை விஞ்சாத காலப் பகுதியொன்றுக்கான இருவகையில் ஒருவகை மறியற்றண்டனைக்கும் அல்லது அத்தகைய குற்றப்பணம் மற்றும் மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதல் வேண்டும்;

(ஆ) நீதிமன்றத்தினால் தீர்மானிக்கப் படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதியினுள் (2) ஆம் உட் பிரிவின்கீழான உரிமமொன்றைப் பெற்றுக்கொள்ளுமாறு தேவைப் படுத்தப்படுதல் வேண்டும்.

(4) ஆளொருவர் (3) ஆம் உட் பிரிவின்கீழான தவறொன்றுக்குக் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டு நீதிமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்ட காலப்பகுதியினுள் உரிமமொன்றைப் பெற்றுக் கொள்ளாமல் அத்தகைய செயற்பாட்டைத் தொடர்ச்சி யாகக் கொண்டுநடாத்துகின்றவிடத்து, நீதிமன்றமானது, பணிப்பாளர் தலைமை யதிபதியினால் அல்லது அது சார்பில் எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலரினால் செய்யப் பட்ட மூடிவிடுவதற்கான விண்ணப்ப மொன்றின்மீது, அத்தகைய ஆள் உரிமமொன்றைப் பெற்றுக் கொண்டு

அவ்வாறு பெற்றுக்கொண்ட உரிமத்தின் பிரதியொன்றை நீதிமன்றத்தின் முன்னர் காண்பிக்கும் வரை அத்தகைய செயலிடத்தை, கைத்தொழிலை அல்லது வர்த்தகச் செயற்பாட்டை மூடிவிடுமாறு கட்டளையிடுதல் வேண்டும்.

(5) ஏதேனும் விதித்துரைக்கப்பட்ட தீங்கு விளைவிக்கும் கழிவைத் தோற்று விக்கின்ற,கையாளுகின்ற அல்லது முகாமை செய்கின்ற ஏதேனும் செயலிடத்தை, கைத்தொழிலை அல்லது வர்த்தகச் செயற் பாட்டை கொண்டுநடாத்துகின்ற உரிமம் பெற்றவர், அதிகாரசபையினால் தீர் மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய கால எல்லைகளின்போதும் அவ்வாறு அடிக்கடியாகவும் தீங்குவிளைவிக்கும் கழிவு அத்துடன் அத்தகைய கழிவின் அளவு அல்லது கனவளவு மற்றும் அத்தகைய கழிவின் வகுதியை அதிகார சபைக்கு அறிவித்தல் வேண்டும்.

(6) ஐந்தாம் உட்பிரிவின் ஏற்பாடு களை மீறுகின்ற ஒவ்வோராளும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் நீதிவானொருவரின் முன்னரான சுருக்க விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் ஒரு இலட்சம் ரூபாவுக்குக் குறையாத குற்றப் பணமொன்றுக்கு அல்லது இரண்டாண்டு களை விஞ்சாத காலப்பகுதியொன்றுக்கான இருவகையில் ஒருவகை மறியற் றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப் பணம் மற்றும் மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதல் வேண்டும்.

செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கும் விதித்துரைக்கப்பட்ட தீங்குவிளைவிக்கும் கழிவை முகாமைசெய்வதற்கு மான உரிமமொன்றை வழங்குதல்

23ஊஅ.(1) விதித்துரைக்கப் படக்கூடியவாறான படிவத்தில் விண்ணப்பமொன்றைப் பெற்றதன் மீதும் மற்றும் விதித்துரைக்கப்பட்ட உரிமக்கட்டணத்தைச் செலுத் தியதன் மீதும் பணிப்பாளர் தலைமையதிபதி அல்லது

பணிப்பாளர் தலைமையதிபதியினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலர் அதன்கண் குறித்துரைக்கப்பட்ட நிகழ்வுகள்பற்றித் திருப்திப்படுவதன்மேல் உரிமமொன்றை வழங்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட உரிமமானது (4) ஆம் உட்பிரிவின்கீழ் வழங்கப்பட்டவாறான அத்தகைய அளவுக் குறிப்பீடுகளுக்கமைய தீங்கு விளைவிக்கும் கழிவின் விதித்துரைக்கப்பட்ட வகுதிகளைத் தோற்றுவிப்பதற்கும், சேகரிப்பதற்கும், இடம்பெயர்ப்பதற்கும், களஞ்சியப்படுத்துவதற்கும் மீளப் பயன்படுத்துவதற்கும், மீட்டுப் பெறுவதற்கும், பரிகரிப்பதற்கும், மீள்சூழற்சிசெய்வதற்கும், செயன்முறைப்படுத்துவதற்கும் அல்லது கையுதிர்ப்பதற்கும் விண்ணப்பகாரருக்கு அதிகாரமளிக்கலாம்.

(3) பணிப்பாளர் தலைமையதிபதி அல்லது பணிப்பாளர் தலைமையதிபதியினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலர், திருப்திப்படாதவிடத்து, அத்தகைய முடிபுக்கான காரணங்களைக்கொடுத்து, (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட விண்ணப்பமொன்றை நிராகரிக்கலாம். இப்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட முடிபு இறுதியானதும் முற்றானதுமாக இருத்தல் வேண்டும்.

(4) இப்பாகத்தின்கீழ் வழங்கப்பட்ட ஒவ்வோர் உரிமமும் –

(அ) விதித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய படிவத்தில் இருத்தல் வேண்டும்;

(ஆ) காலத்துக்குக்காலம் விதித் துரைக்கப்படக் கூடிய வாறாக, அத்தகைய நியதி களுக்கு, நிபந்தனை களுக்கு, நியமங்களுக்கு அல்லது கட்டளைக் கற்களுக்கு அமைந்ததாதல் வேண்டும்;

(இ) உரிமத்தில் குறித் துரைக்கப்பட வேண்டிய அத்தகைய காலப்பகுதிக் குச் செல்லுபடியாதல் வேண்டும்; ஆயின், அது பன்னிரெண்டு மாதங் களைக் கொண்டவொரு காலப்பகுதிக்கு மேற்பட்ட காலப்பகுதிக்காக இருத்த லாகாது; அத்துடன்

(ஈ) விதித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய படிவத்திலான மீள்மதிப் பீட்டின்மேல் புதுப்பிக்கப் படற்பாலதாகக் கூடும்.

ஓர் உரிமத்தை இடைநிறுத்துதல் அல்லது இல்லாதாக்குதல்

23ஊஆ.(1) இப்பாகத்தின்கீழ் எவரேனும் ஆளுக்கு உரிமமொன்று வழங்கப்பட்டுள்ளவிடத்தும், அத்த கைய ஆள் இச்சட்டத்தின் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியின் ஏற்பாடுகளுக்கு அல்லது உரிமத்தின் எவையேனும் நியதிகளுக்கு, நிபந்தனைகளுக்கு, நியமங்களுக்கு அல்லது கட்டளைக் கற்களுக்கு முரணாகச்

செயலாற்றுமிடத்தும், அல்லது உரிமம் வழங்கப்பட்டதிலிருந்து பெறுகின்ற சூழல் இயற்கைக் காரணிகள் காரணமாக அல்லது வேறுவகையாக மாற்றியமைக்க ப்பட்டுள்ளவிடத்தும் அல்லது மாற்றப்பட்டுள்ளவிடத்தும் அல்லது அத்தகைய விதித்துரைக்கப்பட்ட தீங்குவிளைவிக்கும் கழிவின் தொடர்ச்சியான தோற்றுவிப்பு, கையாளுகை அல்லது முகாமைத்துவம், சூழலின் பயனுறு பயன்பாட்டைப் பாதகமான முறையில் பாதிக்குமிடத்தும் அல்லது பாதிக்கக்கூடியதாக இருக்குமிடத்தும், அல்லது சூழலின்மீது பாதகமான ஒரு விளைவை ஏற்படுத்துகின்ற அல்லது ஏற்படுத்தும் சாத்தியங் கொண்ட ஏதேனும் கைத்தொழில் விபத்தைத் தடுப்பதற்கு உரிமம் பெற்றவர் தவறுமிடத்தும், பணிப்பாளர் தலைமையதிபதி அல்லது பணிப்பாளர் தலை மையதிபதியினால் அதிகாரமளிக் கப்பட்ட எவரேனும் அலுவலர், கட்டளைமூலம், அத்தகைய கட்டளையில் குறித்துரைக்கப் பட்ட ஏதேனும் காலப்பகுதிக்கு அத்தகைய உரிமத்தை ஒன்றில் இடை நிறுத்தலாம் அல்லது அத்தகைய உரிமத்தை இல்லாதாக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் குறித்துரைக்கப்பட்டவாறாக உரிம மொன்றின் இடைநிறுத்துகை அல்லது இல்லாதாக்குகை முடிவுறா துள்ளபோது ஆளொருவர் செயற் பாடொன்றைத் தொடர்ந்தும் கொண்டு நடாத்துமிடத்து,

23அ எனும் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகள் ஏற்றமாற்றங்களுடன் அத்தகைய ஆள் தொடர்பாக ஏற்புடையனவாதல் வேண்டும். மற்றும் பணிப்பாளர் தலைமை யதிபதி, நியாயாதிக்கங் கொண்ட நீதிவான் நீதிமன்றத்துக்கு உடனடியாக விண்ணப்பத்தை செய்தல் வேண்டும்.

விதித்துரைக்கப்பட்ட தீங்குவிளைவிக்கும் கழிவை முகாமை செய்வதற்கான தொழில்நுட்ப நிபுணர் குழு

23ஊஇ.(1) விதித்துரைக் கப்பட்ட தீங்கு விளைவிக்கும் கழிவை முகாமை செய்வதற்காக (இதனகத்துப்பின்னர் "குழு" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) தொழில் நுட்ப நிபுணர் குழுவொன்று நியமிக்கப்படுதல் வேண்டும்; குழு அதிகாரசபையினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய எண்ணிக்கையினரான உறுப்பினர்களைக் கொண்டிருத் தல் வேண்டும். அதிகாரசபையின் பணிப்பாளர் தலைமையதிபதி, குழுவின் தவிசாளராக இருத்தல் வேண்டும்.

(2) குழுவின் பணியானது, விதித்துரைக்கப்பட்ட தீங்கு விளைவிக்கும் கழிவின் முகாமைத்துவம் தொடர்பில் அதிகாரசபையினால் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட ஏதேனும் கருமத்தின்மீது அதிகாரசபைக்கு மதியுரையளித்தலாதல் வேண்டும்.

தீங்குவிளைவிக்கும் கழிவின் முகாமைத்துவ முறைமை

23ஊஈ.(1) பின்வருவனவற்றுக்கு இயைபான கருமங்களை அமைச்சர் விதித்துரைக்கலாம்:-

(அ) தீங்குவிளைவிக்கும் மற்றும் வேறு கழிவின் இறக்குமதியும், ஏற்றுமதியும், நிலைமாற்றுகையும்;

(ஆ) தீங்குவிளைவிக்கும் மற்றும் வேறு கழிவு தொடர்பாக இறக்குமதியாளரினால் அல்லது ஏற்றுமதியாளரினால் அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படுதல்.

(2) பணிப்பாளர் தலைமையதிபதியின் அல்லது பணிப்பாளர் தலைமையதிபதியினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலரின் எழுத்திலான அனுமதியின்றி ஆளெவரும் விதித்துரைக்கப்பட்ட தீங்கு விளைவிக்கும் கழிவை அல்லது வேறு கழிவை இறக்குமதி செய்தலோ, ஏற்றுமதிசெய்தலோ அல்லது நிலைமாற்றுகையில் வைத்திருத்தலோ ஆகாது.

(3) இப்பிரிவின் ஏற்பாடுகளை மீறிச் செயலாற்றுகின்ற ஓர் இறக்குமதியாளர், ஓர் ஏற்றுமதியாளர், ஒரு கையாளுநர் அல்லது ஒரு வசதிப்படுத்துநர் உட்பட எவரேனுமாள் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன் ஒரு நீதிவான் முன்னரான சுருக்கவிளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மீது பின்வரும் குற்றப்பணமொன்றுக்கு ஆளாதலும் வேண்டும்:-

(அ) ஒரு தொன்னை விஞ்சாதவொரு கப்பலேற்றுகைக்காக ஒரு மில்லியன் ரூபாவுக்குக் குறையாதது;

(ஆ) ஒரு தொன்னை விஞ்சுகின்றதும் மற்றும் ஐந்து தொன்கள் வரையும் அத்துடன் ஐந்து தொன்களை விஞ்சாததுமான ஒரு தொன்னின் ஒவ்வொரு மேலதிக அதிகரிப்பொன்றுக்கானதுமான கப்பலேற்றுகைக்காக இரண்டு மில்லியன் ரூபாவுக்குக் குறையாதது; அல்லது

(இ) கப்பலேற்றுகை ஐந்து தொன்களை விஞ்சுமிடத்து, ஒவ்வொரு மேலதிகத் தொன்னுக்கும் மூன்று மில்லியன் ரூபா;

இது, அதற்கிணங்க, வீதப்படியான அடிப்படையில் ஏற்புடையற்பாலனவான வேறெவையேனும் விதிப்பனவுகளுடன் சேர்த்து விதிப்பனவு செய்யப்படுதல் வேண்டும்.

(4) எவரேனுமாள் (3) ஆம் உட்பிரிவின்கீழான தவறொன்றுக்கு குற்றத்தீர்ப்பளிக்கப்படுமிடத்து, பணிப்பாளர் தலைமையதிபதி அல்லது பணிப்பாளர் தலைமையதிபதியினால் எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரொருவர் மூல நாட்டுக்குக் கழிவைத் திருப்பியனுப்புவதற்கான கட்டளையொன்றுக்காக நீதிவானுக்கு

விண்ணப்பமொன்றைச் செய்தல் வேண்டுமென்பதுடன் இயைபான ஆகுசெலவு குற்றத் தீர்ப்பளிக்கப்பட்ட ஆளினால் பொறுக்கப்படுதலும் வேண்டும்.

(5) இப்பாகத்தின் நோக்கங்களுக்காக -

"செயலிடம்" என்பது, விதித்துரைக்கப்பட்ட வகுதிகளினவான கழிவுகளைத் தோற்றுவித்தல், சேகரித்தல், இடம்பெயர்த்தல், களஞ்சியப்படுத்துதல், செயன்முறைப்படுத்துதல், பரிகரித்தல் மற்றும் கையுதிர்த்தல் என்பவற்றுக்காகப் பயன்படுத்தப்பட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான ஏதேனும் அமைவிடம் என்று பொருளாகும்;

“கையாளுதல்" என்பது, தீங்கு விளைவிக்கும் கழிவின் விதித்துரைக்கப்பட்ட வகுதிகளைச் சேகரித்தல், இடம்பெயர்த்தல், களஞ்சியப்படுத்துதல், மீளப் பயன்படுத்துதல், மீட்டுப் பெறுதல், பரிகரித்தல், மீள் சூழற்சிசெய்தல், செயன் முறைப்படுத்துதல் அல்லது கையுதிர்த்தல் என்று பொருளாகும்; அத்துடன்

"வேறு கழிவு" என்பது, 1989ஆம் ஆண்டின் தீங்கு விளைவிக்கும் கழிவின் தேசம் கடந்த நகர்வுகளைக் கட்டுப்படுத்துதலும் அவற்றின் கையுதிர்ப்பும் மீதான பசெல் சமவாயத்தில் குறித்துரைக்கப்பட்ட கழிவு என்று பொருளாகும்.".

## பாகம் IV அஆ
## இரசாயனப் பொருட்களை முகாமை செய்தல்

இரசாயனப் பொருட்களை முகாமை செய்தலும் தொழில்நுட்ப மதியுரைக் குழுவொன்றைத் தாபித்தலும்

23 ஊஉ. (1) அமைச்சர், வர்த்தமானியில் வெளியிடப்படும் ஒரு கட்டளைமூலம், அதிகார சபையினால் முகாமை செய்யப் பட்டவையும் (இதனகத்துப் பின்னர் "இரசாயனப் பொருட்கள்" எனக் குறிப்பீடு செய்யப் படுகின்றவையுமான) இரசாயனப் பொருட்கள்,இரசாயனப்பதார்த்தங் கள், இரசாயனப் பொருட் தொகுதி அல்லது இரசாயனப் பொருள் உற்பத்திகளின் பெயர்கள் பற்றிய நிரலைக் குறித்துரைக்கலாம். அமைச்சர், அத்தகைய நிரலை அவசியமாகக்கூடியவாறாகக் காலத்துக்குக்காலம், அதேபோன்ற முறையில் வெளியிடப்பட்டவொரு கட்டளைமூலம் வேறுபடுத்தலாம்.

(2) பணிப்பாளர் தலைமையதி பதியிடமிருந்து அல்லது அதற்கெனப் பணிப்பாளர் தலைமையதிபதியினால் அதிகார மளிக்கப்பட்ட எவரேனும் அலுவலரிடமிருந்து எந்த இர சாயனப்பொருட்களுக்காக அனு மதிப்பத்திரமொன்று பெற்றுக் கொள்ளப்படவேண்டுமோ அந்த இரசாயனப் பொருட்கள் தொடர் பில் இயைபான செயற்பாடு களை அமைச்சர் வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம் விதித்துரைக்கலாம். ஆளெவரும், அத்தகைய ஏதேனும் விதித்துரைக் கப்பட்ட செயற்பாட்டை, ஓர் அனுமதிப்பத்திரத்தின் அதிகாரத்தின் கீழன்றி நிறைவேற்றுதலாகாது.

(3) இரசாயனப்பொருட்களின் முகாமை தொடர்பான நியமங் களையும், நடவடிக்கைமுறை யையும், கட்டளைக்கற்களையும் அமைச்சர் விதித்துரைக்கலாம்.

(4) (இதனகத்துப்பின்னர் இப் பாகத்தில் “குழு” எனக் குறிப்பீடு செய்யப்படும்) இரசாயனப் பொருட்களை முகாமை செய்வதற் கான தொழில்நுட்ப மதியுரைக் குழுவொன்று நியமிக்கப்படுதல் வேண்டும். இது, அதிகாரசபை யினால் தீர்மானிக்கப்படக் கூடிய வாறான அத்தகைய எண்ணிக்கை யினரான உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும். பணிப் பாளர் தலைமையதிபதி குழுவின் தவிசாளராக இருத்தல் வேண்டும்.

(5) குழுவின் பணியானது, இரசாயனப் பொருட்களின் முகாமைதொடர்பில் அதிகார சபையினால் அதற்கு ஆற்றுப் படுத்தப்பட்ட ஏதேனும் கருமத்தின் மீது மதியுரை வழங்குவதாதல் வேண்டும்.

(6) இப்பிரிவின் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியின் ஏற்பாடுகளை மீறுகின்ற எவரேனும் ஆள் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன் நீதிவா னொருவர் முன்னரான சுருக்க விளக்கத்தின் பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்படுவதன் மீது ஐந்து இலட்சம் ரூபாவுக்குக் குறையாத குற்றப்பணத்திற்கு அல்லது இரண்டாண்டுகளை விஞ்சாதவொரு காலத்துக்கு

இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

## பாகம் IV அஇ
## சூழலுக்கு வெளியேற்றப்பட்ட கழிவுநீரைக் கட்டுப்படுத்துதல்

கழிவுநீர் வெளியேற்றக் கட்டணம்

23ஊஊ.(1) அமைச்சர், வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம், வெளியேற்றப்பட்ட தீழ்ப்பாக்கிகளையும் சூழலின்மீது அவற்றின் விளைவையும் கவனத்துட்கொண்டு, தொழிற்சாலைகளிலிருந்தும் மற்றும் வேறு மூலங்களிலிருந்தும் வெளியேற்றப்பட்ட கழிவுநீர்ச்சுமை தொடர்பில் விதித்துரைக்கப்பட்ட சூத்திரத்துக்கிணங்கக் கழிவுநீர் வெளியேற்றற் கட்டணத்தைக் குறித்துரைத்தல் வேண்டும். சொல்லப்பட்ட கட்டணத்தை விதிப்பனவுசெய்கின்ற நடவடிக்கைமுறையை அமைச்சர் விதித்துரைக்கலாம்.

(2) பணிப்பாளர் தலைமையதிபதி அல்லது பணிப்பாளர் தலைமையதிபதியினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலர் (1) ஆம் உட்பிரிவின்கீழ் குறித்துரைக்கப்பட்டதான கழிவுநீர் வெளியேற்றற் கட்டணத்தை விதிப்பனவு செய்தல் வேண்டும்.

கழிவுநீர் வெளியேற்றற் கட்டணத்தையும் மிகைக் கட்டணத்தையும் கொடுப்பனவு செய்தல்

20ஊஎ.(1) பணிப்பாளர் தலைமையதிபதி அல்லது பணிப்பாளர் தலைமையதிபதியினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலர் 24 ஆம் பிரிவின் நியதிகளின்படி தொழிற்சாலையின் அல்லது

வேறு மூலத்தின் சொந்தக்காரருக்கு அல்லது இருப்பாட்சியாளருக்குக் கழிவுநீர் வெளியேற்றற் கட்டணத்தை அறிவித்தல் வேண்டும். சொந்தக்காரர் அல்லது இருப்பாட்சியாளர், அத்தகைய அறிவித்தல் பெறப் பட்ட தேதியிலிருந்து முப்பது நாட்களினுள் சொல்லப்பட்ட கட்டணக்கொடுப்பனவைக் கொடுத்துத்தீர்த்தல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழான அறிவித்தல் எந்தச் சொந்தக் காரருக்கு அல்லது இருப்பாட்சி யாளருக்கு வழங்கப்பட்டுள்ளதோ அந்தச் சொந்தக்காரர் அல்லது இருப்பாட்சியாளர் தேவைப்பட்ட காலப்பகுதியினுள் அதனைச் செலுத்தத் தவறுமிடத்து, பணிப்பாளர் தலைமையதிபதி அல்லது பணிப்பாளர் தலைமை யதிபதியினால் அதிகாரமளிக்கப் பட்ட எவரேனும் அலுவலர், கழிவுநீர் வெளியேற்றற் கட்டணத்துடன் சேர்த்து மேலதி கமாக, ஒழுங்குவிதியினால் விதித்துரைக்கப்படவேண்டிய வொரு மிகைக்கட்டணத்தையும் விதிக்கலாம்.

(3) சூழலின் நலன்கருதி அதிகாரசபை தோதானதெனக் கருதக்கூடியவாறு, சூழலுக்கான கழிவுநீர் வெளியேற்றத்தைத் துரிதமானமுறையில் குறைக்கும் படி, கட்டுப்படுத்தும்படி அல்லது திசைத்திருப்பும்படி அதிகார சபையானது தொழிற்சாலையின் அல்லது வேறு மூலத்தின் சொந்தக்காரரை அல்லது

இருப்பாட்சியாளரைப் பணித்தல் வேண்டும். தொழிற்சாலையின் அல்லது வேறு மூலத்தின் சொந்தக்காரர் அல்லது இருப்பாட்சியாளர், கழிவுநீர் வெளியேற்றற் கட்டணக் கொடுப்பனவுடன் சேர்த்து மேலதிகமானதாக இருக்க வேண்டிய இப்பணிப்புக்கு இணங்கியொழுகுதல் வேண்டும். அதிகாரசபை அத்தகைய பணிப்பு நிறைவேற்றப்படுவதனை உதிரிப் படுத்துதலும் வேண்டும்.

(4) இப்பாகத்தின்கீழ் செலுத் தப்படற்பாலனவான எல்லாக் கட்டணங்களும் 5 ஆம் பிரிவின் கீழ் தாபிக்கப்பட்ட நிதியத்துக்கு வரவுவைக்கப்படுதல் வேண்டு மென்பதுடன் கழிவுநீர் வெளி யேற்றம் தொடர்பான ஏதேனும் புதிய கருத்திட்டத்தை நடைமுறைப் படுத்துவதற்காக அல்லது ஏலவே யுள்ள ஏதேனும் கருத்திட்டத் தைச் சீராக்குவதற்காகப் பேணப் படுதலும் வேண்டும்.

(5) சூழல்சார் நிலைபெறுதகு தன்மையை உறுதிப்படுத்து வதற்குச் சூழலுக்கான சேதத்தைக் கட்டுப்படுத்துவதற்காக, குறைப் பதற்காக அல்லது நிவர்த்தி செய்வதற்காக எடுக்கப்பட்ட வழிமுறைகள் பற்றிய அறிக்கை யொன்றைப் பணிப்பாளர் தலைமையதிபதி வருடாந்தம் அதிகாரசபைக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

அதிகாரசபைக்கு வருமதியான கட்டணங்களை அறவிடுவதற்கான முறை

23ஊஏ.(1) ஆளொருவர் தேவைப்பட்ட காலப்பகுதியினுள் கழிவுநீர் வெளியேற்றற் கட்டணத்தைச் செலுத்தத்

தவறுமிடத்து பணிப்பாளர் தலைமையதிபதி அல்லது பணிப்பாளர் தலைமையதிபதியினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலர், நியாயாதிக்கங் கொண்டுள்ள நீதிவான் முன்னரான சுருக்க நடவடிக்கை முறை என்றவகையாகச் சட்ட நடவடிக்கையைத் தொடுப்பதன் மூலம் அத்தகைய பணத் தொகையை அறவிடுவதற்கு மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கலாம்.

(2) பிரிவு 23ஊஊஎ இன் (3) ஆம் உட்பிரிவின்கீழ் கழிவுநீர் வெளியேற்றற் கட்டணத்தைச் செலுத்தத் தவறுகின்ற, மிகைக் கட்டணத்தைச் செலுத்தத் தவறுகின்ற அல்லது அதன்கீழ் வழங்கப்பட்ட ஏதேனும் பணிப்புக்கு இணங்கியொழுகத் தவறுகின்ற ஆள் ஒவ்வொருவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன் நீதிவானொருவர் முன்னரான சுருக்க விளக்கத்தின்பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்படுவதன்மீது ஒரு இலட்சம் ரூபாவுக்குக் குறையாததும் ஒரு மில்லியன் ரூபாவுக்கு மேற்படாததுமான குற்றப்பணமொன்றுக்கு அல்லது இரண்டாண்டுகளை விஞ்சாதவொரு காலத்துக்கு இருவகையிலொரு வகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம் மற்றும் மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

**15.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 23ஏ என்னும் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

முதன்மைச் சட்டவாக்கத்தின் 23 ஏ என்னும் பிரிவைத் திருத்துதல்

(1) அதன் (3) ஆம் உட்பிரிவில் -

(அ) "குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல்" என்னும் சொல்லுக்குப் பதிலாக "நியாயாதிக்கங் கொண்டுள்ள நீதிவான்முன்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மீது" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(ஆ) அதன் (அ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும்:-

"(அ) ஒரு இலட்சம் ரூபாவுக்குக் குறையாததும் ஒரு மில்லியன் ரூபாவுக்கு மேற்படாததுமான குற்றப்பணமொன்றுக்கும் அதன்பின்னர்தவறுதொடர்ந்து புரியப்படும் பட்சத்தில், குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட பின்னர் தவறானது அவ்வாறு தொடர்ந்து புரியப்படும் ஒவ்வொரு நாளுக்கும் ஐயாயிரம் ரூபாவான குற்றப் பணமொன்றுக்கும் ஆளாதல் வேண்டும்;";

(2) அதன் (4) ஆம் உட்பிரிவில் "ஆறு வார காலமொன்றின்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "நான்கு வார காலமொன்றின்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்.

**16.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 23ஓ என்னும் பிரிவு, அதன் (3) ஆம் உட்பிரிவில் இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது: -

முதன்மைச் சட்டவாக்கத்தின் 23 ஓ என்னும் பிரிவைத் திருத்துதல்

(1) "குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல்" என்னும் சொல்லுக்குப் பதிலாக "நியாயாதிக்கங் கொண்டுள்ள நீதிவான்முன்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மீது" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(2) அதன் (அ) என்னும் பந்தியில் "பத்தாயிரம் ரூபாவுக்குக் குறையாததும் ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சாததுமான" என்னும் சொற்களுக்குப் பதிலாக "ஒரு இலட்சம் ரூபாவுக்குக் குறையாததும் ஒரு மில்லியன் ரூபாவை விஞ்சாததுமான" என்னும் சொற்களை இடுவதன்மூலமும் "ஐந்நூறு ரூபா" என்னும் சொற்களுக்குப் பதிலாக "ஐயாயிரம் ரூபா" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 23 ங என்னும் பிரிவைத் திருத்துதல்

**17.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 23ங என்னும் பிரிவு, அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவுகளை இடுவதன்மூலம் இத்தாற் திருத்தப்படுகின்றது:-

"(4) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகளைமீறுகின்ற எவரேனும் ஆள் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன் நீதிவானொருவர்முன்னரான சுருக்கவிளக்கத்தின்பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மீது –

(அ) ஒரு இலட்சம் ரூபாவுக்குக் குறையாததும் ஒரு மில்லியன் ரூபாவை விஞ்சாததுமான குற்றப்பணமொன்றுக்கும் அதன் பின்னர் தவறானது தொடர்ந்து புரியப்படும் பட்சத்தில், குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட பின்னர் தவறு அவ்வாறு தொடர்ந்து புரியப்படும் ஒவ்வொரு நாளுக்கும் ஐயாயிரம் ரூபாவான குற்றப் பணமொன்றுக்கும் ஆளாதலும் வேண்டும்;

(ஆ) அத்தகைய கட்டளையிற் குறித்துரைக்கின்ற அத்தகைய காலப்பகுதியினுள் நீதிமன்றத்தினால் கட்டளையிடப் பட்டவாறான அத்தகைய சரிசெய்யும் வழிமுறைகளை மேற்கொள்வதற்கும் தீழ்ப்பின்மூலம் சூழலுக்கு மேற்கொண்ட சேதம் விளைவிக்கப்படுவதனைத் தடுப்பதற்கும் நீதிமன்றத்தினால் கட்டளையிடப்பட்டவாறு சூழலை மீட்டுப்பெறுவதற்கும் தேவைப் படுத்தப்படுதலும் வேண்டும்; அத்துடன்

(இ) எடுக்கப்பட்ட சரிசெய்யும் நடவடிக்கைகள் பற்றிப் போதிய மற்றும் ஏற்றுக்கொள்தகு எண்பிப்பை அத்தகைய காலப்பகுதியின் முடிவில் கொடுத்துதவுவதற்குத் தேவைப்படுத்தப் படுதலும் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 23 ஞ என்னும் பிரிவைத் திருத்துதல்

**18.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 23ஞ என்னும் பிரிவு, அதன் (2) ஆம் உட்பிரிவில், "குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மேல் பத்தாயிரம் ரூபாவுக்குக் குறையாததும் ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சாததுமான குற்றப்பணமொன்றுக்கும், தவறு தொடர்ந்து புரியப்படும் ஒவ்வொரு நாளுக்கும் ஐந்நூறு ரூபா குற்றப்பணமொன்றுக்கும் ஆளாதல் வேண்டும்." என்னும் சொற்களுக்குப் பதிலாகப் "நியாயாதிக்கங்கொண்டுள்ள நீதிவான்முன்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மீது ஒரு இலட்சம் ரூபாவுக்குக் குறையாததும் ஒரு மில்லியன் ரூபாவுக்கு மேற்படாததுமான குற்றப்பணமொன்றுக்கும் அதன்பின்னர் தவறானது தொடர்ந்து புரியப்படும் பட்சத்தில், குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டபின்னர் தவறு அவ்வாறு தொடர்ந்து புரியப்படும் ஒவ்வொரு நாளுக்கும் ஐயாயிரம் ரூபாவான குற்றப்பணமொன்றுக்கும் ஆளாதலும் வேண்டும்." என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 23ஞஅ என்னும் பிரிவை உட்புகுத்துதல்

**19.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 23ஞ என்னும் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு உட்புகுத்தப்படுவதுடன் இது இச்சட்டவாக்கத்தின் 23 ஞஅ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்:-

அதிர்வு மூலம் விளைவிக்கப் பட்ட தீழ்ப்பு

23ணஅ.(1) ஆளெவரும், மிதமிஞ்சிய நில அல்லது வான் அதிர்வின் கனஅளவு, தீவிரத்தன்மை அல்லது தரம் தொடர்பாக விதித்துரைக்கப்படக் கூடியவாறான நியமங்களின் கீழ் அல்லது வரையறைகளின்கீழ் தவிர அத்தகைய அதிர்வை வெளியேற்றுதலோ அல்லது வெளியேற்றலை விளைவித்தலோ ஆகாது.

(2) இப்பிரிவின் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்கு விதியின் ஏற்பாடுகளை மீறுகின்ற

எவரேனும் ஆள் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன் நியாயாதிக்கங்கொண்ட நீதிவானொருவர் முன்னரான சுருக்கவிளக்கத்தின்பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மீது-

(அ) ஒரு இலட்சம் ரூபாவுக்குக் குறையாததும் ஒரு மில்லியன் ரூபாவுக்கு மேற்படாததுமான வொரு குற்றப்பணத்திற்கும் அதன்பின்னர் தவறானது தொடர்ந்து புரியப்படும் பட்சத்தில், குற்றத் தீர்ப்பளிக்கப் பட்ட பின்னர் தவறு அல்லது தொடர்ந்து புரியப்படும் ஒவ்வொரு தவறுக்கும் ஐயாயிரம் ரூபாவானவொரு குற்றப் பணத்திற்கும் ஆளாதலும் வேண்டும்; அத்துடன்

(ஆ) அதிர்வின்மூலம் சூழலுக்கு மேற் கொண்ட சேதம் விளைவிக்கப் படுவதனைத் தடுப்பதற்கு நீதிமன்றத்தினால் கட்டளை யிடப்படக் கூடியவாறான அத்தகைய சரிசெய்யும் நட வடிக்கைகளை எடுப்பதற்கும் சூழலுக்கு விளைவிக்கப்பட்ட சேதங்களை மீட்டுப் பெறுவதற்கும் அதன்பின்னர் அத்தகைய சரிசெய்யும் வழி முறைகளின் செயற்பாடு பூர்த்தி செய்யப்பட்டமை பற்றிப் போதிய மற்றும் ஏற்றுக்கொள்ளத்தகு எண்பிப்பை அத்தகைய காலப் பகுதியின் முடிவில் கொடுத்துதவு வதற்கும் தேவைப்படுத்தப் படுதலும் வேண்டும்.”.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 23ந என்னும் பிரிவைத் திருத்துதல்

**20.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 23ந என்னும் பிரிவு, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில், “குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட தன்மேல் பத்தாயிரம் ரூபாவுக்குக் குறையாததும் ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சாததுமான குற்றப்பணமொன்றுக்கு” என்னும் சொற்களுக்குப் பதிலாக “நியாயாதிக்கங்கொண்டுள்ள

நீதிவான்முன்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஒரு இலட்சம் ரூபாவுக்குக் குறையாததும் ஒரு மில்லியன் ரூபாவுக்கு மேற்படாததுமான குற்றப்பணமொன்றுக்கும் அதன்பின்னர் தவறானது தொடர்ந்து புரியப்படும் பட்சத்தில், குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டபின்னர் தவறு அவ்வாறு தொடர்ந்து புரியப்படும் ஒவ்வொரு நாளுக்கும் ஐயாயிரம் ரூபாவான குற்றப்பணமொன்றுக்கும்" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தாற்திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 23ப என்னும் பிரிவைத் திருத்துதல்

**21.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 23ப என்னும் பிரிவு, இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும்:-

"(அ) ஏதேனும் செயன்முறை, செயற்பாடு, வியாபாரம், களஞ்சியப்படுத்துகை அல்லது கைத்தொழிலுக்காக ஏதேனும் உற்பத்தியை அல்லது பொருளை உற்பத்தி செய்வதனை அல்லது பயன்படுத்துவதனைத் தடைசெய்தல் அல்லது அத்தகைய ஏதேனும் உற்பத்தியில், செய்முறையில், செயற்பாட்டில், வியாபாரத்தில், களஞ்சியப்படுத்துகையில் அல்லது கைத்தொழிலில் பயன்படுத்தப்பட வேண்டிய ஏதேனும் பொருளைக் குறித்துரைத்தல்;";

(2) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில், "தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்." என்னும் சொற்களுக்குப் பதிலாக "தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன் நீதிவானொருவர் முன்னரான சுருக்கவிளக்கத்தின்பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மீது ஒரு இலட்சம் ரூபாவுக்குக் குறையாததும் ஒரு மில்லியன் ரூபாவுக்கு மேற்படாததுமான குற்றப்பணமொன்றுக்கும் தவறு தொடர்ந்து புரியப்படும் பட்சத்தில், தவறு அவ்வாறு

தொடர்ந்து புரியப்படும் ஒவ்வொரு நாளுக்கும் ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கும் அல்லது இரண்டாண்டுகளை விஞ்சாதவொரு காலத்துக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கும் அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்." என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(3) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவை உட்புகுத்துவதன்மூலமும்:-

"(4) மூன்றாம் உட்பிரிவின் கீழ் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட எவரேனும் ஆள் அமைச்சரினால் ஆக்கப்பட்ட கட்டளை யிலுள்ள ஏதேனும் தடையைத் தொடர்ந்து மீறுமிடத்து அல்லது ஏதேனும் தேவைப்பாட்டுக்கு இணங்கியொழுகத் தவறுமிடத்து, நீதிமன்றமானது, பணிப்பாளர் தலைமையதிபதியினால் அல்லது பணிப் பாளர் தலைமையதிபதியினால் அதற்கென அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலரி னால் மூடுகைக்கான விண்ணப்பமொன்று செய்யப்படுவதன்மேல், அத்தகைய செயன் முறை, செயற்பாடு, வியாபாரம், களஞ்சியப் படுத்துகை அல்லது கைத்தொழில் எந்த வளவுகளினுள் நிறைவேற்றப்படுகின்றதோ அந்த வளவுகளை மூடிவிடும்படி கட்டளை யிடுதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 23பஅ என்னும் புதிய பிரிவைத் உட்புகுத்துதல்

**22.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 23ப என்னும் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு உட்புகுத்தப்படுவதுடன் இது அச்சட்டவாக்கத்தின் 23பஅ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்:-

"23ப என்னும் பிரிவின்கீழ் தடைசெய்யப்பட்ட ஏதேனும் உற்பத்தியை அல்லது பொருளைக் கட்டுக்காப்பினுள் எடுப்பதற்கான அல்லது கைப்பற்றுவதற்கான தத்துவம்

23பஅ.(1) பணிப்பாளர் தலைமையதிபதி அல்லது பணிப்பாளர் தலைமையதிபதியினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலர், உரிய விசாரணையின் பின்னர், 23ப என்னும் பிரிவின் கீழான தவறொன்று புரியப்பட்டுள்ளது அல்லது புரியப்படுகின்றது என நம்புவதற்கு அவருக்குக் காரணமிருப்பின்-

(அ) நாளின் ஏதேனும் நியாயமான நேரத்தில், எவையேனும் வளவுகளினுள் ஏதேனும் தடைசெய்யப்பட்ட உற்பத்தி அல்லது பொருள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளதா அல்லது உற்பத்தி செய்யப்படுகின்றதா என்பதை, அல்லது அத்தகைய உற்பத்தி அல்லது பொருள் அத்தகைய ஏதேனும் உற்பத்தியில், செயன்முறையில், செயற்பாட்டில், வியாபாரத்தில், களஞ்சியப்படுத்துகையில் அல்லது கைத்தொழிலில் பயன்படுத்தப்பட்டுள்ளதா அல்லது பயன்படுத்தப்படுகின்றதா என்பதை நிச்சயிப்பதற்கு அவ்வளவுகளினுட் பிரவேசித்து அவற்றைச் சோதனையிடலாம்; அத்துடன்

(ஆ) ஏதேனும் தடைசெய்யப்பட்ட உற்பத்தியை அல்லது பொருளைக் கட்டுக்காப்பினுள் எடுக்கலாம் மற்றும் கைப்பற்றலாம்.

(2) பணிப்பாளர் தலைமையதிபதி அல்லது பணிப்பாளர் தலைமையதிபதியினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலர், இயைபான ஆவணங்களுடன் சேர்த்து, (1) ஆம் உட்பிரிவின்கீழ் கட்டுக்காப்பினுள் எடுக்கப்பட்ட அல்லது கைப்பற்றப்பட்ட ஏதேனும் தடைசெய்யப்பட்ட உற்பத்தியை அல்லது பொருளை அத்தகைய கட்டுக்காப்பினுள் எடுத்தல் அல்லது கைப்பற்றுதல் தேதியிலிருந்து இருபத்திநான்கு மணித்தியாலங்களுள் நியாயாதிக்கங்கொண்ட நீதிவான்முன்னர் காண்பித்தல் வேண்டும்.

(3) பணிப்பாளர் தலைமையதிபதி அல்லது பணிப்பாளர் தலைமையதிபதியினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலர், ஏதேனும் தடைசெய்யப்பட்ட உற்பத்தி அல்லது பொருள் கைப்பற்றப்பட்டுள்ள இடத்தின்மீது நியாயாதிக்கங்கொண்ட நீதிவானுக்கு, அத்தகைய உற்பத்தியை அல்லது பொருளை அழிப்பதற்கான அல்லது மீள் சுழற்சி செய்வதற்கானவொரு கட்டளைக்காக விண்ணப்பிக்கலாம். நீதிவான் அவசியமென அவர் கருதக்கூடியவாறான அத்தகைய விசாரணையின்பின்னர், பொறுப்பாகவுள்ள ஆளின் ஆகுசெலவில் அத்தகைய உற்பத்தியை அல்லது பொருளை அழிப்பதற்கான அல்லது மீள்சுழற்சிசெய்வதற்கான முறையைக் குறித்துரைத்து அத்தகைய கட்டளையை ஆக்கலாம்.”.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 23அஅ என்னும் பிரிவைத் திருத்துதல்

**23.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 23அஅ என்னும் பிரிவு, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவுகளை இடுவதன்மூலம் இத்தாற் திருத்தப்படுகின்றது:-

"(2) ஓராம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட அங்கீகாரம், பணிப்பாளர் தலைமையதிபதியினால் நியமிக்கப்படவேண்டிய இயைபான கருத்திட்டத்தை அங்கீகரிக்கும் முகவராண்மையிடமிருந்து பெற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும். அத்தகைய நியமனத்துக்கு முன்னர், பணிப்பாளர் தலைமையதிபதி, கருத்திட்டத்தை அங்கீகரிக்கின்ற முகவராண்மை அத்தகைய விதித்துரைக்கப்பட்ட கருத்திட்டத்தில் ஏதேனும் அக்கறையைக் கொண்டிருத்தலாகாது அல்லது அதில் எவ்வழியிலும் கரிசனை கொண்டதாக அல்லது சம்பந்தப்பட்டதாக இருத்தலாகாது எனத் தன்னைத் திருப்திபடுத்திக்கொள்ளுதல் வேண்டும்.

(3) கருத்திட்டத்தை அங்கீகரிக்கின்ற முகவராண்மையொன்று விதித்துரைக்கப்பட்டவொரு கருத்திட்டத்தின் கருத்திட்டத்தை அங்கீகரிக்கும் முகவராண்மையாக அதிகாரசபை பணியாற்றுமிடத்துத்தவிர, பணிப்பாளர் தலைமையதிபதியின் ஒருப்பாட்டுடன் மட்டுமே விதித்துரைக்கப்பட்டவொரு கருத்திட்டத்தை அங்கீகரித்தல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 23ஆஆ என்னும் பிரிவைத் திருத்துதல்

**24.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 23ஆஆ என்னும் பிரிவு, அதன் (3) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் உட்பிரிவை உட்புகுத்துவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது:-

"(3அ) கருத்திட்டத்தை அங்கீகரிக்கின்ற முகவராண்மையொன்று, விடயத்துக்கேற்ப, அதற்குச் சமர்ப்பிக்கப்பட்ட ஆரம்பச் சூழல்சார் பரிசோதனை அறிக்கையொன்றுக்கு அல்லது சூழல்சார் தாக்க மதிப்பீட்டறிக்கையொன்றுக்கு அங்கீகாரம் அளிப்பதனைக் கவனத்துட் கொள்ளும்போது, இச்சட்டத்தின் 32 ஆம் பிரிவின்கீழும் பாகம் IVஆ வின்கீழும் விதித்துரைக்கப்பட்ட நியமங்களுடனும் கட்டளைக் கற்களுடனும் இணங்கியொழுகியமையின் அளவைப் பரிசோதனை செய்தல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 23ஈஈ என்னும் பிரிவைத் திருத்துதல்

**25.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 23ஈஈ என்னும் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அதன் (1) ஆம் உட்பிரிவை உடனடுத் துப் பின்வரும் உட்பிரிவுகளை உட்புகுத்து வதன் மூலமும்:-

"(1அ) இப்பாகத்தின்கீழ் எவரேனும் ஆளுக்கு அல்லது ஆட்கள் குழுவுக்கு அங்கீகாரமொன்று அளிக்கப்பட்டுள்ள விடத்தும், அத்தகைய அங்கீகாரம் எந்நிபந்தனையின்மீது அளிக்கப் பட்டுள்ளதோ அந்நிபந்தனை எதற்கும் முரணான ஏதேனும் செயலை அத்தகைய ஆள் செய்யுமிடத்தும், அதிகாரசபையானது கட்டளைமூலம் அங்கீகாரத்தை இல்லாதாக்கலாம் அல்லது அத்தகைய கட்டளையிற் குறித்துரைக்கப்பட்டவாறான அத்தகைய காலப்பகுதிக்கு அத்தகைய அங்கீ காரத்தை இடைநிறுத்தலாம்.

(1ஆ) விடயத்துக்கேற்ப, உட்பிரிவு (1) றின்கீழ் அல்லது உட்பிரிவு (1அ) வின்கீழ் ஏற்பாடு செய்யபட்டவாறாகக் கருத்திட்டத்தை அங்கீகரிக்கின்ற முகவராண்மையினால் அல்லது அதிகாரசபையினால் செய்யப்பட்ட முடிபினால் இன்னலுறும் எவரேனும் ஆள் அல்லது ஆட்கள் குழு, அத்தகைய முடிபு அறிவிக்கப்பட்டபின்னர் முப்பது நாட்களினுள் அத்தயை முடிபுக் கெதிராகச் செயலாளருக்கு எழுத்தில் மேன்முறையீடுசெய்யலாம்.".

(2) அதன் (2) ஆம் உட்பிரிவில், "அத்தகைய மேன்முறையீட்டின்மீது" எனும் சொற் களுக்குப் பதிலாக, "உட்பிரிவு (1ஆ) இன் கீழ் செய்யப்பட்ட அத்தகைய மேன் முறையீட்டின்மீது" எனும் சொற்களை இடுவதன்மூலமும்.

**26.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 23ஊஊ என்னும் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவுகள் உட்புகுத்தப் படுவதுடன் இவை அச்சட்டவாக்கத்தின் 23எஎ, 23ஏஏ மற்றும் 23ஒஒ என்னும் பிரிவுகளாகப் பயனுறுதலும் வேண்டும்:-

முதன்மைச் சட்டவாக்கத்தில் 23எஎ, 23ஏஏ மற்றும் 23ஒஒ என்னும் பிரிவுகளை உட்புகுத்துதல்

"இப்பாகத்தின் கீழான தவறுகள்

23எஎ(அ) 23ஆஆ என்னும் பிரிவின் கீழான அங்கீகாரமொன்றைப் பெற்றுக்கொள்ளாமல் ஒரு விதித்துரைக்கப்பட்ட கருத் திட்டத்தை நிறைவேற்றுகின்ற;

(ஆ) பிறழ்வழியுய்க்கும் சாத்தியங் கொண்ட தகவல்களைக் கொடுத்துதவுகின்ற அல்லது ஒரு விதித்துரைக்கப்பட்ட கருத்திட்டத்தின், விடயத்துக் கேற்ப, சூழல்சார் தாக்க மதிப் பீட்டறிக்கைக்கு அல்லது ஆரம்பச் சூழல்சார் பரிசோதனை அறிக்கைக்கு இயைபானதாகப் பொய்யான அல்லது செம்மையற்ற தகவல்களை வழங்குகின்ற;

(இ) ஒரு விதித்துரைக்கப்பட்ட கருத்திட்டத்துக்கான அங்கீ காரத்தைப் பெற்றிருந்து 23உஉ என்னும் பிரிவின்கீழ் குறித்துரைக்கப்பட்டவாறு தோதான கருத்திட்டத்தை அங்கீகரிக்கின்ற முக வராண்மையிடமிருந்து எழுத் திலான முன்னங்கீகாரமின்றி அத்தகைய விதித்துரைக்கப் பட்ட கருத்திட்டத்துக்கு ஏதேனும் மாற்றத்தை அடுத்துப் பின்னர் செய்கின்ற;

(ஈ) விடயத்துக்கேற்ப, சூழல்சார் தாக்க மதிப்பீட்டறிக்கையை

அல்லது ஆரம்பச் சூழல்சார் பரிசோதனை அறிக்கையை கொடுத்துதவியிருந்து அத்தகைய அங்கீகாரத்தைப் பெறுவதற்கு முன்னர் ஒரு விதித்துரைக்கப்பட்ட கருத்திட்டத்தில் ஈடுபடுகின்ற;

(உ) அங்கீகாரம் அடுத்துப்பின்னர் இல்லாதாக்கப்பட்ட ஒரு விதித்துரைக்கப்பட்ட கருத்திட்டத்துக்கான அவ்வங்கீகாரத்தை ஒரு தடவை பெற்றிருந்து சொல்லப்பட்ட கருத்திட்டத்தில் தொடர்ந்து ஈடுபடுகின்ற;

(ஊ) (i) கருத்திட்டத்தை அங்கீகரிக்கின்ற முகவராண்மையினால் சுமத்தப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகாமல் ஒரு விதித்துரைக்கப்பட்ட கருத்திட்டத்தைக் கைவிடுகின்ற; அல்லது

(ii) அத்தகைய கைவிடுகைப் பற்றிக் கருத்திட்டத்தை அங்கீகரிக்கின்ற முகவராண்மைக்கும், அவசியமானவிடத்து, பிரிவு 23உஉ இன்கீழ் குறித்துரைக்கப்பட்டவாறு அதிகார சபைக்கும் தெரிவிக்கத் தவறுகின்ற;

(எ) எந்த நியதிக்கு அல்லது நிபந்தனைக்கு அமைய ஏதேனும் கருத்திட்டத்தை அங்கீகரிக்கின்ற முகவராண்மையினால் ஏதேனும் விதித்துரைக்கப்பட்ட கருத்திட்டத்துக்காக அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளதோ அந்த

ஏதேனும் நியதியை அல்லது நிபந்தனையை மீறுகின்ற, எவரேனும் ஆள் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன் நியாயாதிக்கங் கொண்டுள்ள நீதிவானொருவர் முன்னரான சுருக்கவிளக்கத்தின்பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மீது பத்து மில்லியன் ரூபாவுக்கு மேற்படாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது மூன்றாண்டுகளை விஞ்சாதவொரு காலத்துக்கான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

சூழல்சார் தாக்க மதிப்பீடொன்று எந்தக் கருத்திட்டத்துக்காகத் தேவைப்படுகின்றதோ அந்தவொரு கருத்திட்டத்துக்காகச் சூழல்சார் முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புத் திட்டம் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்

23ஏஏ.(1) விடயத்துக்கேற்ப, ஒரு சூழல்சார் தாக்க மதிப்பீட்டுக்கு மற்றும் ஓர் ஆரம்பச் சூழல்சார் பரிசோதனைக்கு அமைந்ததாக்கப்பட்டுள்ள ஒரு விதித்துரைக்கப்பட்ட கருத்திட்டத்தைக் கொண்டுநடாத்துகின்ற எவரேனும் ஆள், கருத்திட்டத்துக்காகக் கருத்திட்டத்தை அங்கீகரிக்கின்ற முகவராண்மை அங்கீகாரம் அளிப்பதிலிருந்து ஒரு மாதத்தினுள், சூழல்சார் தாக்க மதிப்பீட்டுச் செயன்முறையிலிருந்து எழுகின்ற முகாமைத்துவ வழக்குகள் தெளிவானமுறையில் வரைவிலக்கணங் கூறப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுவதனை உறுதிப்படுத்துவதற்கு இப்பாகத்தின்கீழான சூழல்சார் முகாமைத்துவ மற்றும் கண்காணிப்புத் திட்டத்தை, கருத்திட்டத்தை அங்கீகரிக்கின்ற முகவராண்மைக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் சமர்ப்பிக்கப்பட்ட சூழல்சார் முகாமைத்துவ

மற்றும் கண்காணிப்புத் திட்டத்தில் ஏற்பாடுசெய்யப்பட்ட செயற்பாடு களின் முன்னேற்றத்தை காலாகாலம் கருத்திட்டத்தை அங்கீகரிக்கின்ற முகவராண்மைக்கு அறிக்கையிடுதல், விதித்துரைக்கப்பட்ட கருத்திட்ட மொன்றைக் கொண்டுநடாத்துகின்ற எவரேனும் ஆளின் கடமையாதல் வேண்டும். கருத்திட்டத்தை அங்கீகரிக் கின்ற முகவராண்மையானது காலத்துக் குக்காலம் சொல்லப்பட்ட முகாமைத்துவத் திட்டத்தின் முன்னேற்றத்தைச் சோதனை யிடுதல் வேண்டுமென்பதுடன் அதன் தகுந்த நடைமுறைப்படுத்துகை பற்றித் திருப்திபடுதலும் வேண்டும்.

(3) இப்பிரிவின் ஏற்பாடுகளுள் எவற்றையும் மீறுகின்ற எவரேனும் ஆள் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன் நியாயாதிக்கங் கொண்டுள்ள நீதிவானொருவர் முன்னரான சுருக்கவிளக்கத்தின்பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மீது பத்து மில்லியன் ரூபாவை விஞ்ஞாத குற்றப் பணமொன்றுக்கு அல்லது மூன்றாண்டு களை விஞ்சாதவொரு காலத்துக்கான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

(4) இப்பிரிவின் நோக்கத்துக்காக "சூழல்சார் முகாமைத்துவ மற்றும் கண்காணிப்புத் திட்டம்" என்பது, ஒரு விதித்துரைக்கப்பட்ட கருத்திட்டத்தைக் கொண்டுநடாத்துகின்ற ஆளினால் நிறைவேற்றப்படும் விதித்துரைக்கப் பட்ட தணிப்பு வழிமுறைகளைக் குறித்த நடவடிக்கைகளாக்குவதனைத் தேவைப்படுத்துகின்ற எல்லாவற்றையும் அடக்கியவொரு திட்டம் என்று பொருளாகும்.

எந்த கருத் திட்டத்துக் காக ஓர் ஆரம்பச் சூழற் பரிசோதனை தேவையாகவுள்ள தோ அந்தவொரு கருத்திட்டத்துக் காக அறிக்கைகள் சமர்ப்பிக்கப் படுதல் வேண்டும்

23ஒஒ.(1) ஓர் ஆரம்பச் சூழல் பரிசோதனைக்கு உட்பட்டுள்ளவொரு விதித்துரைக்கப்பட்ட கருத்திட்டத்தை கொண்டுநடாத்துகின்ற எவரேனும் ஆள் இயைபான கருத்திட்டத்தை அங்கீகரிக்கின்ற முகவராண்மைக்கு காலாகால அறிக்கைகளைச் சமர்ப்பித்தல் வேண்டும். அத்தகைய ஆள் 23ஆஆ என்னும் பிரிவின்கீழ் அளிக்கப்பட்ட அங்கீகாரத்தின் நிபந்தனைகளுக்கு இணங்கியொழுகப்படுவதனை உறுதிப் படுத்துதல் வேண்டும்.

(2) இப்பிரிவின் ஏற்பாடுகளை மீறுகின்ற எவரேனுமாள் தவ றொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டு மென்பதுடன் நியாயாதிக்கங் கொண்டுள்ள நீதிவானொருவர் முன்னரான சுருக்க விளக்கத்தின்பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன்மீது பத்து மில்லியன் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது மூன்று மாதங்களை விஞ்சாதவொரு காலத்துக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற் றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தில் IVஈ, IVஉ, IVஊ மற்றும் IVஎ என்னும் புதிய பாகங்களை உட்புகுத்துதல்

**27.** முதன்மைச் சட்டவாக்கத்தின் புதிதாக உட்புகுத்தப் பட்ட 23எஎ என்னும் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பாகங்கள் உட்புகுத்தப்படுவதுடன் இவை அச்சட்டவாக் கத்தின் பாகம் IVஈ (பிரிவுகள் 23ஏஏ, 23ஒஒ), பாகம் IVஉ (பிரிவுகள் 23ஓஓ, 23ஔஔ, 23கக), பாகம் IVஊ (பிரிவு 23டட) மற்றும் IVஎ (பிரிவுகள் 23சச, 23ஓஓ) என்னும் பாகங்களாகப் பயனுறுதலும் வேண்டும்:-

"பாகம் IVஈ

## மூலோபாயச் சூழல்சார் மதிப்பீடு

மூலோபாயச் சூழல்சார் மதிப்பீடு

23ஏஏ.(1) வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், வகுத்தமைக்கப்படும்போது அல்லது திருத்தப்படும்போது குறிப்பிடத்தக்க சூழல்சார் விளைவுகளைக் கொண்டிருக்கக்கூடிய அரசாங்க நிறுவனத்தின் ஏதேனும் கொள்கை, மூலோபாயம், திட்டம் அல்லது நிகழ்ச்சித்திட்டம் ஏற்றுக் கொள்ளப்படு முன்னர் அல்லது தொழிற்பாட்டுக்கு உட்படுத்தப்படு முன்னர் ஒரு மூலோபாயச் சூழல்சார் மதிப்பீட்டுக்கு அமைந்ததாக்கப்படுதல் வேண்டும்:

ஆயின், இப்பிரிவின் ஏற்பாடுகள், ஒரு தேசிய பந்தோபஸ்துக் கரிசனையை மேற்கொள்வதற்கு அல்லது ஒரு தேசிய அவசரகால நிலைமையில் ஓர் எதிர்பாராத் திட்டமாகத் தயாரிக்கப்பட்ட ஏதேனும் கொள்கை, மூலோபாயம், திட்டம் அல்லது நிகழ்ச்சித்திட்டத்துக்கு ஏற்புடையனவாதலாகாது.

(2) அத்தகைய கொள்கையை, மூலோபாயத்தை, திட்டத்தை அல்லது நிகழ்ச்சித்திட்டத்தை வகுத்தமைக்கின்ற அல்லது திருத்துகின்ற இயைபான அரசாங்க நிறுவனம் உரிய முறையில் நிரப்பப்பட்ட சூழல்சார் முக்கியத்துவமிகு செவ்வைப்பார்த்தல் நிரலை, குறிப்பிடத்தக்க சூழல்சார் விளைவுகளைத் தீர்மானிப்பதற்காக அத்தகைய கொள்கை, மூலோபாயம், திட்டம் அல்லது நிகழ்ச்சித்திட்டம் தொடர்பான கருத்தேற்புப் பத்திரத்துடன் சேர்த்து அதிகாரசபைக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

இவ்வுட்பிரிவின் நோக்கங்களுக்காக, ஒரு "சூழல்சார் முக்கியத்துவ மிகு செவ்வைபார்த்தல் நிரல்" என்பது, ஓர் உத்தேசிக்கப்பட்ட கொள்கை, மூலோபாயம், திட்டம் அல்லது நிகழ்ச்சித்திட்டத்தின் இயல்திற முக்கியத் துவமிக்க சூழல்சார் விளைவுகள் பற்றிய நிகழ்வுகளைச் சேகரிப்பதற்கான ஒரு வினாக்கொத்து என்று பொருளாகும்.

(3) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்குப் பங்கமின்றி, வகுத்தமைக்கப்படும் அல்லது திருத்தப்படும் ஏதேனும் கொள்கை, மூலோபாயம், திட்டம் அல்லது நிகழ்ச்சித்திட்டம், அத்தகைய கொள்கை, மூலோபாயம், திட்டம் அல்லது நிகழ்ச்சித்திட்டம் (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளினுள் அடங்குகின்றதா அல்லதாவென்பதைப்பொருட்படுத்தாது, சூழலின்மீது குறிப்பிடத்தக்க விளைவொன்றைக் கொண்டிருக்கும் சாத்தியங்கொண்டதாகவிருக்கின்றதென அமைச்சருக்குத் தோன்றுமிடத்து, அமைச்சர், எழுத்திலான அறிவித்தல் மூலம், வரைவுக் கொள்கை, மூலோபாயம், திட்டம் அல்லது நிகழ்ச்சித்திட்டத்துடன் ஒரு மூலோபாயச் சூழல்சார் மதிப்பீட்டறிக்கையைத் தயாரித்துப் பரிசீலனைக்காகச் சமர்ப்பிக்கும்படி அத்தகைய கொள்கை, மூலோபாயம், திட்டம் அல்லது நிகழ்ச்சித்திட்டத்தை வகுத்தமைத்தமைக்குப் பொறுப்பாகவுள்ள அரசாங்க நிறுவனத்தைத் தேவைப்படுத்தலாம்.

(4) ஓராம் உட்பிரிவின்கீழ் வரைவுக் கொள்கை, மூலோபாயம், திட்டம் அல்லது நிகழ்ச்சித்திட்டத்துடன் சேர்த்து அல்லது (3) ஆம் உட்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட ஓர் அறிவித்தலின்மூலம் தேவைப்படுத்தப்பட்டவாறு ஒரு மூலோ

பாயச் சூழல்சார் மதிப்பீட்டறிக்கையைத் தயாரித்து அதனைப் பரிசீலனைக்காக அதிகாரசபைக்குச் சமர்ப்பித்தல் ஏதேனும் அரசாங்க நிறுவனத்தின் கடமையாதல் வேண்டும். அதிகாரசபை சொல்லப்பட்ட அறிக்கை யின் மீதான அதன் விதப்புரைகளை அல்லது கரிசனைகளைக் குறித்துரைத் தலும் வேண்டும்.

(5) அதிகாரசபையானது (4) ஆம் உட்பிரிவின்கீழ் அதற்குச் சமர்ப்பிக் கப்பட்ட ஒரு மூலோபாயச் சூழல்சார் மதிப்பீட்டறிக்கையை பெற்றதன் மீது ஒரு சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளிலான ஒவ்வொரு செய்தித்தாளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தலின்மூலம், பொதுமக்கள் அறிக்கையின்மீதான அவர்களின் கருத்துரைகள் எவையேனுமிருப்பின் அவற்றைத் தெரிவிப்பதற்கு அத்தகைய அறிக்கை எந்த இடத்திலும் நேரங் களிலும் அவர்களினால் பார்வைக்குக் கிடைக்கக்கூடியதாகவிருக்குமென அறிவித்தல் வேண்டும். (4) ஆம் உட்பிரிவின்கீழ் சுமத்தப்பட்ட தேவைப் பாடுகளுக்கு இணங்கியொழுகச் சமர்ப்பிக்கப்பட்ட ஒரு மூலோபாயச் சூழல்சார் மதிப்பீட்டறிக்கை, (21 ஆம் அத்தியாயமான) சான்றுக் கட்டளைச் சட்டத்தின் 74 ஆம் மற்றும் 76 ஆம் பிரிவுகளின் நோக்கத்துக்காக ஒரு பகிரங்க ஆவணமாகவிருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(6) பொதுமக்களின் எவரேனும் உறுப்பினர், (5) ஆம் உட்பிரிவின்கீழான அறிவித்தல் வெளியிடப்பட்ட தேதியிலிருந்து முப்பது நாட்களினுள் அதன்மீதான அவரது கருத்துரைகள் எவையேனுமிருப்பின், அவற்றை அதிகாரசபைக்குத் தெரிவிக்கலாம்.

அதிகாரசபையானது, பொதுமக்கள் நலன்கருதி தோதானதென அது கருதுமிடத்து, அவரது கருத்துரைகளுக்கு ஆதாரமாகக் கேட்கப்படுவதற்கு அத்தகைய எவரேனும் ஆளுக்கு வாய்ப்பொன்றை அளிக்கலாம். அத்துடன் அத்தகைய கொள்கையை, மூலோபாயத்தை, திட்டத்தை அல்லது நிகழ்ச்சித்திட்டத்தைப் பரிசீலனை செய்வதில், அத்தகைய ஏதேனும் கேட்பில் வெளிக்கொணரப்பட்ட அத்தகைய கருத்துரைகளையும் மற்றும் வேறெவையேனும் விடயங்கள் இருப்பின் அவற்றையும் கருத்திற் கொள்ளுதலும் வேண்டும். அதன் மேல் அதிகாரசபையானது, இயைபான அரசாங்க நிறுவனத்துக்கு எழுத்தில் செய்யப்பட்டவொரு பரிசீலனையின் மூலம் அதன் கண்டுபிடிப்புகளையும், கரிசனைகளையும், விதப்புரைகளையும் அறிக்கையிடுதல் வேண்டும்.

(7) கொள்கையை, மூலோபாயத்தை, திட்டத்தை அல்லது நிகழ்ச்சிதிட்டத்தைத் தயாரித்த அரசாங்க நிறுவனம், மூலோபாயச் சூழல்சார் மதிப்பீட்டின் கண்டுபிடிப்புகளையும் அதிகாரசபையினால் தயாரிக்கப்பட்ட ஏதேனும் பரிசீலனையின் கண்டுபிடிப்புகளையும், கரிசனைகளையும், விதப்புரைகளையும் கவனத்துட்கொண்டு வரைவுக் கொள்கையை, மூலோபாயத்தை, திட்டத்தை அல்லது நிகழ்ச்சித்திட்டத்தை மீளாய்தல் அல்லது திரிபுபடுத்தல் வேண்டுமென்பதுடன் அதிகாரசபையின் கண்டுபிடிப்புகளுக்குப் பதிலிறுப்பாக வரைவுக்குச் செய்யப்பட்ட அத்தகைய மீளாய்வின் அல்லது திரிபின் எழுத்திலான கூற்றுடன் சேர்த்து இறுதிக் கொள்கையை, மூலோபாயத்தை,

திட்டத்தை அல்லது நிகழ்ச்சித்திட்டத்தை அதிகாரசபைக்கு சமர்ப்பித்தலும் வேண்டும். கொள்கையை, மூலோபா யத்தை, திட்டத்தை அல்லது நிகழ்ச்சித் திட்டத்தைத் தயாரித்த அரசாங்க நிறுவனம், வரைவுக்குச் செய்யப்பட்ட மீளாய்வுகள் அல்லது திரிபுகள் அதிகார சபையின் விதப்புரைகளிலிருந்து வேறுபடின் எழுத்தில் காரணங்களைக் கொடுத்தல் வேண்டும்.

(8) விடயத்துக்கேற்ப, (6) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட அதிகாரசபையினாலான ஒரு பரிசீலனை யின் கண்டுபிடிப்புக்கள், கரிசனைகள் மற்றும் விதப்புரைகளுட்பட, இறுதிக் கொள்கையும், மூலோபாயமும், திட்டமும் அல்லது நிகழ்ச்சித்திட்டமும் (7) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட ஆவணங்களும் அதிகாரசபையின் வலைத்தளத்தில் வெளியிடப்படுதல் வேண்டும்.

(9) ஏழாம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட ஆவணங்களைப் பரிசோதனை செய்தபின்னர் அதிகார சபையானது இயைபான அரசாங்க நிறுவனத்துக்கு அதன் இறுதி அவதானிப்புகளையும் விதப்புரை களையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

(10) விடயத்துக்கேற்ப, (6) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட அதிகாரசபையினாலான ஒரு பரிசீலனை யின் கண்டுபிடிப்புகள், கரிசனைகள் மற்றும் விதப்புரைகள் உட்பட இறுதி கொள்கையும், மூலோபாயமும், திட்டமும் அல்லது நிகழ்ச்சித்திட்டமும் (9) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட ஆவணங்களும் இயைபான அரசாங்க நிறுவனத்தினால் அமைச்சரவைக்கு

அல்லது அத்தகைய கொள்கையை, மூலோபாயத்தை, திட்டத்தை அல்லது நிகழ்ச்சித்திட்டத்தை அங்கீகரிப்பதற்குப் பொறுப்பாகவுள்ள வேறேதேனும் அதிகாரசபைக்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

(11) அமைச்சரவை அல்லது அத்தகைய கொள்கையை, மூலோபாயத்தை, திட்டத்தை அல்லது நிகழ்ச்சித் திட்டத்தை அங்கீகரிப்பதற்கு பொறுப்பாகவுள்ள வேறேதேனும் அதிகாரசபை கொள்கையை, மூலோபாயத்தை, திட்டத்தை அல்லது நிகழ்ச்சித்திட்டத்தை அங்கீகரித்தல், வழங்குதல், அல்லது ஏற்றுக்கொள்ளுதல் தொடர்பில் அதன் முடிபைச் செய்வதில் அதிகாரசபையின் மூலோபாயச் சூழல்சார் மதிப்பீட்டறிக்கையையும் இறுதி அவதானிப்புகளையும் விதப்புரைகளையும் கவனத்துட் கொள்ளுதல் வேண்டும்.

(12) பத்தாம் உட்பிரிவின்கீழ் அங்கீகாரம் அளிக்கப்படுமிடத்து, அத்தகைய அங்கீகாரம் வர்த்தமானியிலும் ஒரு சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளிலான ஒவ்வொரு செய்தித்தாளிலும் வெளியிடப்படுதல் வேண்டும்.

(13) ஏதேனும் மூலோபாயச் சூழல்சார் மதிப்பீட்டறிக்கையைப் பரிசீலனை செய்வதற்காக நியாயமான காலஎல்லையினுள் "அந்தரங்கமானவை" என வகுப்பாக்கஞ்செய்யப்படாத எவையேனும் தகவல்களையும் தரவுகளையும் வழங்கும்படி அதிகாரசபை ஏதேனும் அரசாங்க நிறுவனத்துக்குக் கோரிக்கை விடுக்கலாம் என்பதுடன் அத்தகைய நிறுவனம் அதற்கிணங்க அவற்றை வழங்குதலும் வேண்டும்.

மூலோபாயச் சூழ்ல்சார் மதிப்பீட்டுக்கான ஒழுங்குவிதிகள்

23ஒஒ. பின்வருவனவுட்பட்ட கருமங்கள் தொடர்பில், மூலோபாயச் சூழல்சார் மதிப்பீடு பற்றிய ஏற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக அல்லது அவற்றுக்குப் பயன்கொடுப்பதற்காக அமைச்சர் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்:-

(அ) பிரிவு 23ஒஒ வின் (2) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப் பட்டவாறாகச் சூழல்சார் முக்கியத்துவமிகு செவ்வை பார்த்தல் நிரலில் உள்ளடக்கப் படவேண்டிய கட்டளைக் கற்களைத் தீர்மானித்தல்;

(ஆ) மூலோபாயச் சூழல்சார் மதிப் பீட்டறிக்கைகளின் கட்டமைப்பும் உள்ளீடும்;

(இ) ஒரு மூலோபாயச் சூழல்சார் மதிப்பீட்டுச் செயன்முறையை நடாத்துவதற்கான கட்டணம்;

(ஈ) மூலோபாயச் சூழல்சார் மதிப்பீட்டுச் செயன்முறை தொடர்பில் பரிசீலனை மற்றும் முடிபு செய்தல் நோக்கத்துக்காக வெளிப்படையான தன்மையும் பொதுமக்களின் பங்குபற்று கையும்;

(உ) ஒரு மூலோபாயச் சூழல்சார் மதிப்பீட்டுச் செயன்முறையை நிறைவேற்றுவதில் அவசியமான நடவடிக்கைகளைப் பொறுப் பேற்பதற்கு எடுக்கப்பட வேண்டிய காலஎல்லைகள்;

(ஊ) மூலோபாயச் சூழல்சார் மதிப்பீட் டறிக்கையின் ஏதேனும் பரிசீல னையின் கண்டுபிடிப்புகள்,

கரிசனைகள் மற்றும் விதப்புரைகளை மதிப்பீடுசெய்யப்பட்ட கொள்கை, மூலோபாயம், திட்டம் அல்லது நிகழ்ச்சித்திட்டத்தினுட் சேர்த்தல்; அத்துடன்

(எ) கொள்கை, மூலோபாயம், திட்டம் அல்லது நிகழ்ச்சித்திட்டத்தினுட் சேர்க்கப்பட்ட கண்டுபிடிப்புகள், கரிசனைகள் மற்றும் விதப்புரைகளின் நடைமுறைப்படுத்துகையைக் கண்காணித்தல்.

## பாகம் IVஉ

### ஈரநிலங்ளைப் பேணிக்காத்தல்

ஈரநிலங்களை வெளிப்படுத்துதல்

23ஓஓ. வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் வேறுவகையாக ஏற்பாடு செய்யப்பட்டாலொழிய, அமைச்சர், வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம் –

(அ) வேறேதேனும் சட்டத்தின்கீழ் வெளிப்படுத்தப்பட்ட, வரைவிலக்கணங்கூறப்பட்ட அல்லது முகாமைசெய்யப்பட்ட ஈரநிலங்கள் நீங்கலாக, பாதுகாப்புக்காகவும் பேணிக்காப்புக்காகவும் ஈரநிலங்களை வெளிப்படுத்தலாம்; அத்துடன்

(ஆ) வெளிப்படுத்தப்பட்ட அத்தகைய ஈரநிலத்தினுள் அனுமதிக்கத்தக்க செயற்பாடுகளைக் குறித்துரைக்கலாம்.

வெளிப்படுத்தப்பட்ட ஈரநிலங்களைப் பேணிக்காத்தல்

23.ஔஔ.(1) ஆளெவரும், பணிப்பாளர் தலைமையதிபதியின் அங்கீகாரத்தின்கீழன்றி, இச்சட்டத்தின்

நோக்கத்துக்காக, ஏதேனும் வெளிப் படுத்தப்பட்ட ஈரநிலத்தினுள் அல்லது அதன்மீது ஓர் அனுமதிக்கத்தக்க செயற்பாடு தவிர்ந்த ஏதேனும் செயற் பாட்டைத் தொடங்குதலோ, கொண்டு நடாத்துதலோ, அதில் ஈடுபடுதலோ, அதைத் தொடருதலோ அல்லது பூர்த்தி செய்தலோ ஆகாது.

(2) அங்கீகாரத்துக்கான ஒவ்வொரு விண்ணப்பமும் பணிப்பாளர் தலைமை யதிபதியினால் விதித்துரைக்கப்படக் கூடியவாறான படிவத்திலிருத்தல் வேண்டுமென்பதுடன் விண்ணப்பத்தைச் செயன்முறைப்படுத்துவதற்காகவும் விண்ணப்பகாரரின் அங்கீகாரநிபந்தனை களுக்கு இணங்கியொழுகுதலைக் கண் காணிப்பதற்காகவும் விதித்துரைக் கப்பட்ட கட்டணங்களுடன் சேர்த்தனுப் பப்படுதலும் வேண்டும்.

(3) பணிப்பாளர் தலைமை யதிபதி அல்லது பணிப்பாளர் தலைமையதிபதியினால் எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட அலுவல ரொருவர், விண்ணப்பத்தைச் செயன் முறைப்படுத்தும் நோக்கத்துக்காக ஏதேனும் ஆவணத்தைச் சமர்ப்பிக்கும்படி அல்லது மேலதிகத் தகவல்களைக் கொடுத்துதவும்படி விண்ணப்பகாரர் ஒருவரைத் தேவைப்படுத்துதல் வேண்டும்.

(4) எந்தச் செயற்பாடுகளுக்காக இப்பிரிவின்கீழ் அங்கீகாரம் அளிக்கப் பட்டுள்ளதோ அந்தச் செயற் பாடுகள், பணிப்பாளர் தலைமையதி பதியினால் அல்லது பணிப்பாளர் தலைமையதிபதியினால் அதிகார மளிக்கப்பட்ட அலுவலரொருவரினால் குறித்துரைக்கப்பட்டவாறான அத்தகைய

நிபந்தனைகளுக்கு அமைந்தனவாதல் வேண்டும்.

அங்கீகாரமின்றி ஒரு ஈரநிலத்தினுள் செயற்பாடொன்றை நிறைவேற்றுதல் தவறொன்றாதல் வேண்டும்

23கக.(1) இப்பாகத்துக்கு முரணாக வெளிப்படுத்தப்பட்டவோர் ஈரநிலத்தின் ஏதேனும் இடப்பரப்பினுள் அல்லது அதன்மீது அங்கீகாரமின்றி ஏதேனும் செயற்பாட்டைக் கொண்டு நடாத்துகின்ற அல்லது அதில் ஈடுபடுகின்ற அல்லது அதனைத் தொடர்கின்ற அல்லது பூர்த்திசெய்கின்ற ஆளொவ்வொருவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன் நியாயாதிக்கங்கொண்டவொரு நீதிவான் முன்னரான சுருக்க விளக்கத்தின்பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மீது-

(அ) ஒரு மில்லியன் ரூபாவுக்கு குறையாததும் பத்து மில்லியன் ரூபாவை விஞ்சாததுமான குற்றப் பணமொன்றுக்கு அல்லது இரண்டாண்டுகளை விஞ்சாதவொரு காலத்துக்கான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்; அத்துடன்

(ஆ) பணிப்பாளர் தலைமையதிபதியினால் விதந்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு இணங்கியொழுகும்படியும் பணிப்பாளர் தலைமையதிபதியின் திருப்திக்கு ஈரநிலத்தை மீட்டளிக்கும்படியும் தேவைப்படுத்தப்படுதலும் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் குற்றத் தீர்ப்பளிக்கப்படும் எவரேனும் ஆள், அவ்வுட்பிரிவின்கீழ் நீதிமன்றத்தினால்

தீர்மானிக்கப்பட்ட காலப்பகுதியினுள் பணிப்பாளர் தலைமையதிபதியினால் விதந்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு இணங்கியொழுகாமல் அத்தகைய செயற்பாட்டைத் தொடர்ந்து கொண்டு நடாத்துமிடத்து, நீதிவானானவர், பணிப்பாளர் தலைமையதிபதியினால் அல்லது அதற்கென அவரினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஆளினால் விண்ணப்பமொன்று செய்யப் படுவதன்மீது, அத்தகைய ஆள் அத்தகைய விதப்புரைகளுக்கு இணங்கி யொழுகும்வரை, ஏதேனும் செயற் பாட்டின் மூடுகைக்கு அல்லது இல்லா தொழிப்புக்குக் கட்டளையிடுதல் வேண்டும்.

## பாகம் IVஊ

## விரிவாக்கப்பட்ட உற்பத்தியாளர் பொறுப்புடைமை

விரிவாக்கப்பட்ட உற்பத்தியாளர் பொறுப்புடைமையின் பொறிமுறையைத் தாபித்தல்

23ஙங.(1) அமைச்சர், வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம், ஒன்றில் சுயாதீனமாக அல்லது வேறெவரேனும் ஆளுடன் ஒருமித்து பொறுப்பேற்கப்படவேண்டிய விரிவாக்கப்பட்ட உற்பத்தியாளர் பொறுப்புடைமையை நடைமுறைப் படுத்துவதற்கமைந்த பண்டங்களை அல்லது உற்பத்திகளைக் குறித்துரைத்தல் வேண்டும்.

(2) விரிவாக்கப்பட்ட உற்பத்தி யாளர் பொறுப்புடைமையைத் தொடர்ந்து நடைமுறைப்படுத்துவதற்கு அமைச்சர், ஒழுங்குவிதிகள்மூலம் ஓர் ஒருங் கிணைந்த பொறிமுறையைத் தாபிக்கலாம்; மீள்சுழற்சிசெய்தல், மீளப்பயன்படுத்துதல் அல்லது கையுதிர்த்தல் மூலம் என்றவகையாக

அல்லது வேறேதேனும் வகையில் இறுதிக் கையுதிர்ப்புவரை, ஒரு பண்டத்தின் அல்லது உற்பத்தியின் இறக்குமதியாளர், உற்பத்தியாளர், விற்பனையாளர், கையாளுநர் மற்றும் பாவனையாளர் அத்தகைய பண்டங் களின் அல்லது உற்பத்திகளின் ஆயுட் சுழற்சி முகாமைத்துவத்துக்காகப் பொறுப் பாகவிருப்பதனை இது தேவைப் படுத்துகின்றது. பொறுப்பாகவுள்ள திறத்தவரிடமிருந்து கட்டணமொன்றை விதிப்பனவுசெய்கின்ற முறையும் நடவடிக்கைமுறையும் பொறிமுறையின் ஏதேனும் நியதிக்கு அல்லது நிபந்தனை க்கு இணங்கியொழுகாமைக்காக விதிப் பனவு செய்யப்பட்ட ஒரு கட்டணமும் பொறி முறையில் குறித்துரைக்கப்படுதல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் குறித் துரைக்கப்பட்ட ஒரு பண்டத்தின் அல்லது உற்பத்தியின் ஒவ்வோர் இறக்குமதியாளரும், உற்பத்தியாளரும், விற்பனையாளரும், கையாளுநரும், பாவனையாளரும் (2) ஆம் உட் பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட பொறி முறையின் நிபந்தனைகளுக்கு இணங்கி யொழுகுதல் வேண்டும்.

(4) பொறிமுறையில் குறித் துரைக்கப்பட்டவாறான கட்டண மொன்றைச் செலுத்துவதற்கு எவரேனும் ஆள் தவறுமிடத்து, பணிப்பாளர் தலைமையதிபதி, நியாயாதிக்கங் கொண்ட நீதிவான்முன்னர் சுருக்க நடவடிக்கைமுறை என்றவகையான வழக்கொன்றைத் தொடுப்பதன்மூலம் அத்தகைய பணத்தொகையை அறவிடு வதற்கு மேற்கொண்டு நடவடிக்கை யெடுக்கலாம்.

(5) இப்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட எவையேனும் ஒழுங்குவிதிகளின் ஏற்பாடு களை மீறுகின்ற ஆளொவ்வொருவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன் நியாயாதிக்கங் கொண்டுள்ள நீதிவானொருவர் முன்னரான சுருக்கவிளக்கத்தின்பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மீது ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பண மொன்றுக்கும் இரண்டாண்டுகளை விஞ்சாதவொரு காலத்துக்கு இருவகையிலொருவகையான மறியற் றண்டனைக்கும் அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

(6) இப்பாகத்தின் நோக்கத்துக் காக-

"விரிவாக்கப்பட்ட உற்பத்தி யாளர் பொறுப்புடைமை" என்பது, ஓர் உற்பத்திக்காக ஓர் உற்பத்தியாளரின் பொறுப்புடைமை எந்தச் சூழல்சார் முகாமைத்துவ அணுகுகையொன்றில் ஓர் உற்பத்தி ஆயுட் சுழற்சியின் பாவனை யாளருக்குப் பின்னரான கட்டத்துக்கு விரிவாக்கப் படுகின்றதோ அந்தச் சூழல்சார் முகாமைத்துவ அணுகுகை என்று பொரு ளாகும்;

"உற்பத்தியாளர்" என்பது, உற்பத்திசெய்வதன் மூலம், இறக்குமதிசெய்வதன் மூலம், விநியோகிப்பதன் மூலம், மாற்றுவதன்மூலம், விற்பனைசெய்வதன் மூலம் அல்லது மீள்

விற்பனை செய்வதன் மூலம் அல்லது வேறு வகையாக அதிகாரமளிக்கப்பட்ட வழிவகைகளைப் பயன்படுத்தி நாட்டினுள் பண்டங்களை, உற்பத்திகளை மற்றும் பொதியிடுதலை அறிமுகப்படுத்துகின்ற ஓர் உருவகம் என்று பொருளாகும்.

## பாகம் IVஎ

## தவறுகளும் தண்டங்களும்

பொதுவான தண்டம்

23சச. இச்சட்டத்தின் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியின் ஏற்பாடுகளை மீறுகின்ற அல்லது அவற்றுக்கிணங்கியொழுகத் தவறுகின்ற அல்லது சட்டத்துக்கிணங்கச் செயலாற்றுகின்ற எவரேனும் ஆளுக்கு முட்டுக்கட்டையிடுகின்ற ஆளொவ் வொருவரும் தவறொன்றுக்குக் குற்றவாளி யாதல் வேண்டுமென்பதுடன் நியாயாதிக்கங் கொண்டுள்ள நீதிவான் நீதிமன்றத்தில் விளங்கப்படத் தக்கவராதலும் வேண்டும்; அத்துடன் தவறொன்றுக்கான தடையெதுவும் வெளிப்படையாக ஏற்பாடு செய்யப்பட்டிராத இச்சட்டத்தின்கீழ் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்கு விதியின்கீழ் அத்தவறொன்றுக்குக் குற்ற வாளியாகக் காணப்படுகின்ற எவரேனும் ஆள் இரண்டு இலட்சத்து ஐம்பதினாயிரம் ரூபாவுக்குக் குறையாததும் பதினைந்து மில்லியன் ரூபாவை விஞ்சாததுமான குற்றப்பணமொன்றுக்கு அல்லது இரண்டாண்டுகளை விஞ்சாதவொரு காலத்துக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்

றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

**சூழலின் மீட்டளிப்பு அல்லது அதற்கான சேதம் முதலியனவற்றைக் குறைத்தல்**

23ஞஞ.(1) விதித்துரைக்கப்பட்ட தாயினுஞ் சரி அல்லதாயினுஞ்சரி, ஏதேனும் செயற்பாட்டின் அல்லது கருத் திட்டத்தின்மூலம் சூழலுக்குச் சேதம், தீங்கு அல்லது தீழ்ப்பு விளைவிக்கப் பட்டுள்ளவிடத்து, நீதிவானானவர், குற்றத்தீர்ப்புக்குமுன்னர், பணிப்பாளர் தலைமையதிபதியினால் செய்யப்படும் விண்ணப்பமொன்றின்மீது, அத்தகைய தீங்குக்கு, சேதத்துக்கு அல்லது தீழ்ப்புக்குப் பொறுப்பாகவுள்ள எவரேனும் ஆளுக்கு, அவ்வாறு செய்வது உசிதமானதென நீதிவான் கருதுகின்ற வாறான அத்தகைய சீர்செய்யும் நடவடிக்கைகளை எடுக்கும்படி கட்டளை யிடலாம். நீதிவான் அத்தகைய தீங்கை, சேதத்தை அல்லது தீழ்ப்பைக் கவனத்துட்கொண்டு, பொறுப்பாகவுள்ள ஆளை, அக்கட்டளையிற் குறித்துரைக் கப்பட்ட அத்தகைய காலப்பகுதியினுள் சூழலை அதன் தொடக்க நிலைமைக்கு மீட்டளிக்குபடி அல்லது சொல்லப்பட்ட சேதம் எந்த இடப்பரப்பில் இடம் பெற்றதோ அந்த இடப்பரப்பின் சேதத்தைக் குறைக்கும்படி தேவைப் படுத்தலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழான விண்ணப்பமொன்று, பிரிவு 23உ அல்லது 23ஈஈ என்பதற்கமைய பணிப்பாளர் தலைமையதிபதியினால் செய்யப்படுதல் வேண்டும். அதிலிருந்து இரண்டு வாரங்களினுள் கட்டளை ஆக்கப்படுவதற்காக, அத்தகைய விண்ணப்பம், அவ்விண்ணப்பத்தைக் கோப்பிட்டதிலிருந்து மூன்று வேலை நாட்களினுள் நீதிவானினால் கேட்கப் படுதல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட கட்டளை எவ்வாள் தொடர்பில் ஆக்கப்பட்டுள்ளதோ அவ்வாள் எவரும், சூழலை மீட்டளிப்பதற்கு அல்லது சேதத்தைக் குறைப்பதற்கு மற்றும் சூழலுக்கான ஏதேனும் மேற்கொண்ட சேதத்தைத் தடுப்பதற்கு அத்தகைய ஆளினால் எடுக்கப்பட்ட வழிமுறைகள் பற்றிய எண்பிப்பை நீதி மன்றத்துக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(4) ஓராம் உட்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட கட்டளைக்கிணங்கியொழுகும் வரை, தவறின் தன்மை மற்றும் இடம்பெற்றுள்ள சேதத்தின் அல்லது தீழ்ப்பின் அளவு என்பவற்றைப் பொறுத்து, அவசியமென நீதிவான் கருதுகின்றவாறான அத்தகைய காலப் பகுதிக்காக ஏதேனும் செயற்பாட்டின் அல்லது கருத்திட்டத்தின் தொழிற்பாடுகளை நீதிவான் இடைநிறுத்தலாம்.

(5) பணிப்பாளர் தலைமையதிபதி, அவருக்குச் சமர்ப்பிக்கப்பட்ட அத்தகைய வழிமுறைகளின் எண்பிப்பின்மீது, எடுக்கப்பட்ட வழிமுறைகள் தொடர்பில் திருப்திப்படுமிடத்து, அவர் எழுத்திலான வெளிப்படுத்துகை ஒன்றை வழங்குதல் வேண்டுமென்பதுடன் வழக்கை முடிவுறுத்துவதற்கென அதனை நீதிமன்றத்தில் காண்பித்தலும் வேண்டும்.

(6) சூழலை மீட்டளிப்பதற்குப் போதிய சரிசெய்யும் நடவடிக்கைகளை எடுப்பதற்கு (1) ஆம் உட்பிரிவின்கீழான கட்டளையொன்று எவ்வாளுக்கு இடப்பட்டதோ அவ்வாளுக்குச்செயல்முறைக்கு உகந்ததல்லாதிருப்பின், பணிப்பாளர் தலைமையதிபதி அவற்றைச் செய்வதற்கு எல்லா வழிமுறைகளையும் எடுத்தல் வேண்டும். அதிகாரசபையினால்

உறப்பட்ட எல்லாச் செலவுகளையும் ஆகுசெலவுகளையும் செலுத்தும்படி பொறுப்பாகவுள்ள சொல்லப்பட்ட ஆளுக்கு நீதிமன்றம் கட்டளையிடுதல் வேண்டும். அத்தகைய செலவுகளும் ஆகுசெலவுகளும் நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்ட குற்றப்பணமொன்றாக விதிப்பனவு செய்யப்படுதல் வேண்டும். நீதிமன்றம், மேலதிகமாக, அது அத்தியாவசியமெனக் கருதுகின்றவாறு தேவைப்படக்கூடிய அத்தகைய எதிர் வரும் ஆகுசெலவுகளுக்கும் கட்டளை யிடலாம்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 24அ என்னும் பிரிவைக் திருத்துதல்

**28.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 24அ என்னும் பிரிவு, அதன் (1) ஆம் உட்பிரிவில் இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது-

(1) அவ்வுட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியில், "தயாரிக்கலாம்; அல்லது" எனும் சொற் களுக்குப் பதிலாக, "தயாரிக்கலாம்;" என்னும் சொல்லை இடுவதன்மூலமும்;

(2) அவ்வுட்பிரிவின் (உ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்திகளை உட்புகுத்துவதன்மூலமும்:-

"(ஊ) ஏதேனும் வியாபாரம், செயன் முறை, கைத்தொழில் அல்லது செயற்பாடு எந்தக் காணியிலும் வளவுகளிலும் கொண்டு நடாத்தப்படுகின்றதோ அல்லது நிறைவேற்றப்பட்டுள்ளதோ அத்தகைய காணியையும் வளவுகளையும் பரிசோதனை செய்தலும் சோதனையிடுதலும் அது தொடர்பான பதிவேடுகள், புத்தகங்கள் மற்றும் இலத்திரனியல் அல்லது வேறு வகையான ஆவணங்கள் என்பவற்றைப் பரிசோதனை

செய்தலும் அவசியமாயின் பதிவேடுகளைத் தயாரித்தலும் மற்றும் அதன் மாதிரிகளை, காணொளிகளை அத்துடன் நிழற்படங்களை எடுத்தலும்; அல்லது

(எ) இச்சட்டத்தினதும் அதன் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்கு விதிகளினதும் ஏற்பாடுகளின் தகுந்த நடைமுறைப்படுத்துகைக்காகத் தேவைப்படக்கூடியவாறாக, அத்தகைய எல்லாச் சோதனைகளையும், பரிசோதனைகளையும் அல்லது வேறு சரிபார்த்தல்களையும் செய்தல்.".

முதன்மைச் சட்டவாக்கத்தில் 24அஅ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்

**29.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 24அ என்னும் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு உட்புகுத்தப்படுவதுடன் இது அச்சட்டவாக்கத்தின் 24அஅ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்:-

"பணிப்பாளர் தலைமையதிபதி விண்ணப்பமொன்றை ஓர் அரசாங்கத் திணைக்களத்துக்கு அல்லது பகிரங்கக் கூட்டுத்தாபனத்துக்கு ஆற்றுப் படுத்தலாம்.

24அஅ.(1) பணிப்பாளர் தலைமையதிபதி அல்லது பணிப்பாளர் தலைமையதிபதியினால் உரியமுறையில் எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலர், சூழலுக்கான பாதகமான சிக்கல்கள் பற்றிய அறிக்கையொன்றைக் கோரி, தோதான அரசாங்கத் திணைக்களமொன்றுக்கு அல்லது பகிரங்கக் கூட்டுத்தாபனத்துக்கு விடயமொன்றை ஆற்றுப்படுத்தலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் கோரிக்கையொன்று விடுக்கப்படுமிடத்து, பணிப்பாளர் தலைமையதிபதி அல்லது பணிப்பாளர் தலைமையதிபதியினால் உரியமுறையில் எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும்

அலுவலர், அத்தகைய திணைக் களத்திடமிருந்து அல்லது கூட்டுத் தாபனத்திடமிருந்து சூழலுக்கான பாதகமான சிக்கல்கள் தொடர்பான அறிக்கையை அவர்பெறும் வரை அத்தகைய விண்ணப்பத்தின்மீது ஏதேனும் முடிபைச் செய்தலாகாது.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 24ஆ என்னும் பிரிவை திருத்துதல்

**30.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 24ஆ என்னும் பிரிவு, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் உட்பிரிவை உட்புகுத்துவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படு கின்றது:-

"(3) இப்பிரிவின் ஏற்பாடுகள் பாகம் IVஅ, பாகம் IVஅஅ, பாகம் IVஅஆ மற்றும் பாகம் IVஅஇ என்பவற்றிற் குறித்துரைக்கப்படும் விதித்துரைக் கப்பட்ட செயற்பாடுகளுக்கு ஏற்புடையற்பாலனவாதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 24ஆ அஎன்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்

**31.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 24ஆ என்னும் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு உட்புகுத்தப்படுவதுடன் இது இச்சட்டவாக்கத்தின் 24ஆஅ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்:-

"சூழலுக்குத் தீங்கு விளை விக்கின்ற அதிகாரமளி க்கப்படாத நிர்மாணங்களை அகற்றுதல்

24ஆஅ(1) இச்சட்டத்தின் ஏற்பாடு களுக்கு முரணாகச் செய்யப்பட்ட ஏதேனும் நிர்மாணத்திலிருந்து பொது மக்களுக்கான ஒரு வசதியீனமுள்ளது அல்லது சூழலுக்கு ஓர் அச்சுறுத்தல், ஒரு தீங்கு அல்லது ஓர் ஊறு விளைவிக்கப் பட்டுள்ளது அல்லது விளைவிக்கப்படும் சாத்தியமுள்ளது என –

(அ) பணிப்பாளர் தலைமையதிபதி கருத்துக் கொள்ளுமிடத்து; அல்லது

(ஆ) பொதுமக்களின் உறுப்பின ரொருவரிடமிருந்து எழுத்திலான முறைப்பாடொன்று பெறப் பட்டு பணிப்பாளர் தலைமை யதிபதி விடயங்களைப்

பரிசோதனைசெய்து அக் கருத்தைக் கொள்ளுமிடத்து, அத்தகைய நிர்மாணத்தை இடித்தழிப்பதற்கான கட்டளை யொன்றை வழங்கும்படி பணிப்பாளர் தலைமையதிபதி, நியாயாதிக்கங் கொண்ட நீதிவானுக்கு விண்ணப்ப மொன்றைச் செய்தல் வேண்டும்.

(2) இடித்தழித்தல் கட்டளையொன்றுக்கான ஒவ்வொரு விண்ணப்பமும் பிரிவு 23உ அல்லது 24ஈஈ என்பதற்கு அமைந்ததாக்கப்படுதல் வேண்டு மென்பதுடன் விண்ணப் பத்துக்கு இயைபான எல்லா நிகழ்வுகளையும் எடுத்துக் கூறு கின்றதும் பணிப்பாளர் தலை மையதிபதியின் கைப்பட்டது மான சான்றிதழொன்றுடன் சேர்த் தனுப்பப்படுதலும் வேண்டும். பணிப்பாளர் தலைமையதி பதியின் சான்றிதழானது சான்றில் ஏல்தகவுடையதாதல் வேண்டுமென்பதுடன் அதன்கண் அடங்கியுள்ள கருமங்கள்பற்றி முதற்றோற்ற எண்பிப்பாதலும் வேண்டும்.

(3) இரண்டாம் உட் பிரிவின்கீழ் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பத்தினதும் சான்றி தழினதும் உள்ளீடுகள்பற்றி நீதிவான் திருப்திப்படுவதன்மீது சொல்லப்பட்ட அதிகாரமளிக்கப் படாத நிர்மாணத்தை இடித்தழிப் பதற்கான கட்டளையொன்றை வழங்கலாம்.

(4) எந்த ஆளுக்குக் கட்டளை ஆற்றுப்படுத்தப்

பட்டுள்ளதோ அந்த ஆள் அத்தகைய கட்டளையிற் குறித் துரைக்கப்பட கூடியவாறான காலப்பகுதியினுள் அத்தகைய நிர்மாணத்தை இடித்தழிப்பதற்கு நடவடிக்கையெடுப்பதும் அத்தகைய இடித்தழிப்புப்பற்றி அதிகாரசபைக்கு அறிவிப்பதும் அவரது பொறுப்பாதல் வேண்டும்.

(5) இடித்தழிப்புக் கட்டளைக்கு இணங்கியொழுகு வதற்கு அத்தகைய ஆள் தவறு கின்ற ஏதேனும் விடயத்தில் நீதிவானானவர், நீதிமன்றப் பிசுக்காலுக்குக் கட்டளை வழங் கப்பட்ட தேதியிலிருந்து மூன்று நாட்களுக்கு முந்தாத அல்லது ஏழுநாட்களுக்குப் பிந்தாத முழு நாட்களாகவுள்ள தேதியொன் றாகவிராததும் அத்தகைய கட்டளையிற் குறித்துரைக்கப் பட்டதுமானவொரு தேதிக்கு முன்னர் அத்தகைய நிர்மாணத்தை இடித்தழிக்கும்படி அத்தகைய பிசுக்காலைத் தேவைப்படுத்தியும் அவருக்கு அதிகாரமளித்தும் உடனடியாக அத்தகைய பிசுக்காலுக்குக் கட்டளையிடுதல் வேண்டும். சொல்லப்பட்ட பிசுக்கால் அல்லது அதன்சார்பில் உதவுவதற்கு நீதிவானினால் அதிகார மளிக்கப்பட்ட எவரேனும் பொலிசு அலுவலர் அந்த வளவுகளினுட் பிரவேசித்து அத்தகைய கட்டளையை நிறை வேற்றுவதற்கு அத்தகைய கட்டளை போதிய அதிகாரமாதல் வேண்டும்.

(6) சூழலுக்கு விளை விக்கப்பட்ட சேதங்களை மீட்டளிப்பதற்கும் அத்தகைய சரிசெய்யும் நடவடிக்கைகள் நிறைவேற்றப்பட்டமைபற்றிப் போதிய, ஏற்றுக்கொள்ளத்தக்க எண்பிப்பை நீதிமன்றத்துக்குக் கொடுத்துதவுவதற்கும் நீதி மன்றத்தினால் தீர்மானிக்கப் படக் கூடியவாறான அத்தகைய சரிசெய்யும் நடவடிக்கைகளை எடுக்கும்படி நீதிமன்றம் பொறுப்பாகவுள்ள ஆளுக்குக் கட்டளையிடலாம்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 24இ என்னும் பிரிவைத் திருத்துதல்

**32.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 24இ என்னும் பிரிவு, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் உட்பிரிவை உட்புகுத்துவதன்மூலம் இத்தாற்றிருத்தப் படுகின்றது:-

"(3) ஓராம் உட்பிரிவின்கீழ் சூழற் பாதுகாப்பு இடப்பரப்பொன்றாக அமைச்சரினால் வெளிப் படுத்தப்பட்ட ஏதேனும் இடப்பரப்பினுள் பிரிவுகள் 24இ மற்றும் 24ஈ என்பவற்றின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளைகளுக்கு முரணாக ஏதேனும் செயற்பாட்டைக் கொண்டுநடாத்துகின்ற எவரேனுமாள் தவறொன்றுக் குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன் நியா யாதிக்கங்கொண்டுள்ள நீதிவானொருவர்முன்னரான சுருக்கவிளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படு வதன்மீது ஒரு மில்லியன் ரூபாவுக்குக் குறையாததும் பத்து மில்லியன் ரூபாவை விஞ்சாததுமான குற்றப்பணமொன்றுக்கு அல்லது இரண்டாண்டுகளை விஞ்சாதவொரு காலத்துக்கான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 24இஅஎன்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்

**33.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 24இ என்னும் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு உட்புகுத்தப்படுவதுடன் இது அச்சட்டவாக்கத்தின் 24இஅ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்:-

"இயற்கை மூலவளங்களுக்கான சேதங்களை மதிப்பீடு செய்தலும் ஆகுசெலவுகளை அறவிடுதலும்

24இஅ.(1) ஆளெவரும், சூழலின் ஏதேனும் இயற்கை வளத்துக்குத் தீங்கை அல்லது சேதத்தை விளைவித்தலாகாது.

(2) தீழ்ப்பை விளைவிக்கின்ற வெளிப்புறப் பதார்த்தங்களை விடுவிப்பதன் மூலம் அல்லது வேறேதேனும் செயற்பாடு அல்லது கருத்திட்டத்தின் மூலம், அத்தகைய செயற்பாடு அல்லது கருத்திட்டம் இச்சட்டத்தின்கீழ் விதித்துரைக்கப்பட்டதாயினுஞ்சரி அல்லதாயினுஞ்சரி, சேதம் அல்லது தீங்கு விளைவிக்கப்பட்டுள்ளவிடத்து, பணிப்பாளர் தலைமையதிபதி அல்லது பணிப்பாளர் தலைமையதிபதியினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலர், தாமதமின்றி, விளைவிக்கப்பட்ட, அத்தகைய சேதம் அல்லது தீங்கின் செலவுதொகையை மதிப்பீடு செய்யலாமென்பதுடன் பொறுப்பாகவுள்ள திறத்தவர்களிடமிருந்து அத்தகைய செலவுதொகையை அறிவிடுவதற்கு நடவடிக்கையெடுக்கலாம். சேதத்தை அல்லது தீங்கை மதிப்பீடுசெய்வதில் உறப்பட்ட செலவுகள் பொறுப்பாகவுள்ள திறத்தவரினால் பொறுக்கப்படுதல் வேண்டும்.

(3) இரண்டாம் உட்பிரிவிற் குறித்துரைக்கப்பட்டவாறு சேதத்தின் அல்லது தீங்கின் செலவுதொகையை மதிப்பீடுசெய்வதில், பணிப்பாளர் தலைமையதிபதி அல்லது பணிப்பாளர் தலைமையதிபதியினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலர், இயைபான துறையிலுள்ள எவரேனும் உள்நாட்டு அல்லது வெளிநாட்டு நிபுணரின் உதவியை நாடலாம்.

(4) பணிப்பாளர் தலைமையதிபதி அல்லது பணிப்பாளர் தலைமையதிபதியினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவர், நியாயாதிக்கங் கொண்டுள்ள நீதிவானின்முன்னர் சுருக்க நடவடிக்கைமுறை என்றவகையாக ஒரு வழக்கைத் தொடுப்பதன்மூலம் பொறுப்பாகவுள்ள ஆட்களிடமிருந்து அத்தகைய பணத்தொகையை அறவிடுவதற்கு மேற்கொண்டு நடவடிக்கையெடுப்பதற்கு அதிகாரமுடையவராதல் வேண்டும்.

(5) பணிப்பாளர் தலைமையதிபதி அல்லது பணிப்பாளர் தலைமையதிபதியினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலர், (2) ஆம் உட்பிரிவின்கீழ் சேதத்தை அல்லது தீங்கை மதிப்பீடுசெய்யும் அடிப்படையில், சூழலை அதன் தொடக்க நிலைமையில் மீட்டளிப்பதற்கும் மேற்கொண்ட ஏதேனும் சேதத்தை அல்லது தீங்கைத் தடுப்பதற்கு அவசியமான எல்லா முற்காப்புகளையும் எடுப்பதற்குமான அத்தகைய சரிசெய்யும் நடவடிக்கைகளை எடுக்கும்படி பொறுப்பாகவுள்ள ஆளைப் பணிக்கலாம். அத்தகைய சேதத்தை அதன் தொடக்க நிலைமைக்கு மீட்டளிக்க முடியாதெனப் பணிப்பாளர் தலைமையதிபதி அல்லது பணிப்பாளர் தலைமையதிபதியினால் அதிகாரமளிகப்பட்ட எவரேனும் அலுவலர் அபிப்பிராயப்படுமிடத்து, பணிப்பாளர் தலைமையதிபதி அல்லது எவரேனும் அலுவலர், பணிப்பாளர் தலைமையதிபதியினால் அல்லது பணிப்பாளர் தலைமையதிபதியினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலரினால் தீர்மானிக்கப்பட வேண்டிய ஏற்றுக் கொள்ளத்தக்கவொரு மட்டத்துக்கு அத்தகைய சேதத்தை

அல்லது தீங்கைச் சீராக்கும்படி பொறுப்பாகவுள்ள திறத்தவர்களைப் பணித்தல் வேண்டும். பொறுப்பாகவுள்ள ஆள் சூழலை அதன் தொடக்க நிலைமைக்கு மீட்டளிக்க தவறுமிடத்து, ஒழுங்குவிதியினால் விதித்துரைக் கப்படக்கூடியவாறான முறையில் ஒரு பொறுப்புடைமைக்கட்டணம் விதிப்பனவு செய்யப்படுதல் வேண்டும்.

(6) இரண்டாம் உட்பிரிவிற் குறித்துரைக்கப்பட்ட பணத்தொகையும் அதிகாரசபையினால் சேகரிக்கப்பட்ட பொறுப்புடைமைக் கட்டணமும், 5 ஆம் பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட நிதியத்துக்கு வரவுவைக்கப்படுதல் வேண்டுமென் பதுடன் பாதிக்கப்பட்ட சூழல் முறைமை களையும் பாதிக்கப்பட்ட திறத்தவர் களையும் முகாமை செய்வதற்காகப் பேணப்படுதலும் வேண்டும்.

(7) இரண்டாம் உட்பிரிவிற் குறித்துரைக்கப்பட்ட பணத் தொகை யையும் (5) ஆம் உட்பிரிவிற் குறித்துரைக்கப்பட்ட பொறுப்பு டைமைக் கட்டணத்தையும் செலுத்து வதற்குத் தவறுகின்ற எவரேனும் ஆள் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன் நியாயாதிங்கங் கொண்டுள்ள நீதிவானொருவரின் முன்னரான சுருக்கவிளக்கத்தின்பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மீது ஒரு மில்லியன் ரூபாவுக்குக் குறையாததும் பத்து மில்லியன் ரூபாவுக்கு மேற்படாத துமான குற்றப்பணமொன்றுக்கு அல்லது இரண்டாண்டுகளை விஞ்சாதவொரு காலத்துக்கான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

(8) இப்பிரிவின் நோக்கத்துக்காக "சூழல் முறைமை" என்பது, ஒரு சூழ்நிலையியற்சார் கூறாக ஊடாடுகின்ற சேதனப்பொருள் தொகுதியும் அவற்றின் பௌதீகச் சூழலும் என்று பொருளாகும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 24ஈ என்னும் பிரிவைத் திருத்துதல்

**34.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 24ஈ என்னும் பிரிவு, அதன் (4) ஆம் உட்பிரிவில், "24 ஆம் பிரிவின்கீழான" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக "24இ என்னும் பிரிவின் கீழான" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 27ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்

**35.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 27 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வருமாறு இடப்படு கின்றது:-

"அதிகார சபையின் எல்லா உறுப்பினர்களும், அலுவலர்களும், ஊழியர்களும் பகிரங்க சேவையாளர் களாகக் கருதப்படுதல்

27. அதிகாரசபையின் எல்லா உறுப்பினர்களும், அலுலர்களும், ஊழியர் களும் –

(அ) (19 ஆம் அத்தியாயமான) தண்ட னைச் சட்டக்கோவையின் கருத்துக்குட்படவும் அதன் நோக்கங்களுக்காகவும் பகிரங்க சேவையாளர்களாகவும்; அத்துடன்

(ஆ) இச்சட்டத்தின்கீழான தவறுகள் தொடர்பில் வழக்கு நடவடிக்கை களைத்தொடுக்கும் நோக் கத்துக்காக 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் 136 ஆம் பிரிவின் கருத்துக்குட்பட பகிரங்க சேவையாளர்களாகவும்,

கருதப்படுதல் வேண்டும்.".

**36.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 27 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுவதுடன் இது அச்சட்டவாக்கத்தின் 27அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்:-

முதன்மைச் சட்டவாக்கத்தின் 27அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்

"இச்சட்டத்தின் பாகம் IVஆ வின் கீழான எல்லாத் தவறுகளும் பிடியாணை யின்றிக் கைதுசெய்தகு தவறுகளாகக் கருதப்படுதல்

27அ. இச்சட்டத்தின் பாகம் IVஆ வின்கீழான எல்லாத் தவறுகளும் 1979 ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க, குற்ற வியல் நடவடிக்கைமுறைச் சட்டக் கோவைச் சட்டத்தின் கருத்துக்குட்படவும் அதன் நோக்கங்களுக்காவும் பிடியாணை யின்றிக் கைதுசெய்தகு தவறுகளாகக் கருதப்படுதல் வேண்டும்.".

**37.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 28 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:-

முதன்மைச் சட்டவாக்கத்தின் 28 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்

"ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் கருத்துக்குட்பட அதிகார சபை யானது ஓர் அட்டவணைப் படுத்தப்பட்ட நிறுவனமாகக் கருதப்படுதல் வேண்டும்.

28. அதிகாரசபையானது, 2023 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் கருத்துக்குட்பட ஓர் அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவன மாகக் கருதப்படுதல் வேண்டுமென் பதுடன் அச்சட்டத்தின் ஏற்பாடுகள் அதற்கிணங்கப் பொருளமைத்துக் கொள்ளப்படுதலும் வேண்டும்.".

**38.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 31 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 31 ஆம் பிரிவை நீக்குதல்

**39.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 31 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத் தப்படுவதுடன் இது அச்சட்டவாக்கத்தின் 31அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்:-

முதன்மைச் சட்டவாக்கத்தில் 31அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்

"ஆட்கள் குழுவினாலான தவறுகள்

31அ. இச்சட்டத்தின்கீழான அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியின்கீழான தவறொன்று ஓர்

ஆட்கள் குழுவினால் புரியப்படுமிடத்து, அப்போது, அவ்வாட்கள் குழு –

(அ) ஒரு கூட்டிணைக்கப்பட்ட குழு வாகவிருப்பின், அக் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் ஒவ்வொரு பணிப்பாளரும், உறுப்பினரும் அல்லது வேறு பிரதான அலுவலரும்; அல்லது

(ஆ) ஒரு குழுமமாகவிருப்பின், அக் குழுமத்தின் ஒவ்வொரு பங்காள ரும்; அல்லது

(இ) ஒரு கூட்டிணைக்கப்படாத குழுவாகவிருப்பின், அத்தகைய குழுவின்ஒருகட்டுப்படுத்துகின்ற உறுப்பினராகவுள்ள ஒவ் வொரு தனியாளும் மற்றும் அக்குழுவின் முகாமைக்கும் கட்டுப்பாட்டுக் கும் பொறுப்பாகவுள்ள அதன் ஒவ்வொரு பிரதான அலுவலரும்,

அத்தகைய தவறுக்குக் குற்றவாளியாகக் கருதப்படுதல் வேண்டும்:

ஆயின், அத்தகைய ஆளெவரும் அத்தகைய தவறு அவர் அறியாமல் புரியப்பட்டதென அல்லது அத்தகைய தவறு புரியப்படுவதனைத் தடுப்பதற்கு அவர் உரிய விழிப்புக்கவனத்தைப் பிரயோகித்தாரென எண்பித்தால், அத்தகைய தவறுக்குக் குற்றவாளியாகக் கருதப்படுதலாகாது.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 32 ஆம் பிரிவைத் திருத்துதல்

**40.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 32 ஆம் பிரிவு, அதன் (2) ஆம் உட்பிரிவில் இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அவ்வுட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன் மூலமும்:-

"(ஈஅ) இ ர சா ய ன ப் பொ ரு ட் க ளி ன் தீங்கு விளைவிக்கும் விளைவு களிலிருந்து மனித சுகாதாரத் தையும் சூழலையும் பாதுகாக்கும் நோக்குடன், தீங்கு விளை விக்கும் பதார்த்தங்களின் பயன்பாட்டின்மீதான மட்டுப் பாடு அல்லது குறித்தசில தீங்கு விளைவிக்கும் பதார்த்தங்களின் தடை மற்றும் அத்தகைய பதார்த்தங்களின் அல்லது சூழலுக்கும் மனித சுகாதாரத் துக்கும் தீங்குவிளைவிப்பதா கவுள்ள ஏதேனும் இரசாயனப் பொருளின் இறக்குமதி, உற்பத்தி, வகுத்தமைப்பு, மீள் பொதியிடுகை, களஞ்சியப் படுத்துகை, இடப்பெயர்வு, விற்பனை மற்றும் பயன்பாடு என்பவற்றின் பதிவும் கண் காணிப்பும்.";

(2) அவ்வுட்பிரிவின் (ட) என்னும் பந்தியில், "கையுதிர்த்தல்; அத்துடன்" என்னும் சொற் களுக்குப் பதிலாக "கையுதிர்த்தல்" என்னும் சொல்லை இடுவதன் மூலமும்;

(3) அவ்வுட்பிரிவின் (ண) என்னும் பந்தியில், "தேவைப்பாடு" என்னும் சொல்லுக்குப் பதிலாக "தேவைப்பாடு; அத்துடன்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(4) அவ்வுட்பிரிவின் (ண) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியைச் சேர்ப்பதன்மூலமும்:-

"(த) இடத்துக்குரிய தடைநீக்க அறிக் கைக்குரிய விண்ணப்பத்துக்கான நடவடிக்கைமுறையும் ஏற்புடையற் பாலனவான கட்டணங்களும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 33 ஆம் பிரிவைத் திருத்துதல்

**41.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 33 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) "காற்றுத் தீழ்ப்பு" என்பதன் வரைவிலக்கணத்துக்கு நேர்முன்னர் பின்வரும் புதிய வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன் மூலமும்:-

"செயற்பாடு" என்பது, தன்மையில் வர்த்தக அல்லது வர்த்தகஞ்சாராததாக உள்ள ஓர் அபிவிருத்திக் கருத்திட்டம், செய் திட்டங்கள், வசதி, கைத்தொழில், வியாபாரம், தொழில், இடப்பெயர்வு வசதி அல்லது தற்காலிகமாக அல்லது நிரந்தரமாக ஒரு சூழல்சார் தீங்கு விளைவிப்பை விளைவிக்கின்ற வேறேதேனும் பொறுப்புமுயற்சி என்பவற்றை உள்ளடக்கும்;

(2) "காற்றுத் தீழ்ப்பு" என்பதன் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் வரைவிலக்கணத்தை உட்புகுத்தப்படுவதன் மூலமும்:-

"தவிசாளர்" என்பது, பிரிவு 3(2) இன்கீழ் தாபிக்கப்பட்ட அதிகாரசபையின் தவிசாளர் என்று பொருளாகும்;

"இரசாயனப்பொருள்" என்பது, தீங்கு விளைவிக்கும் இரசாயனப்பொருட்களை உள்ளடக்கும்;

"அரசியலமைப்பு" என்பது, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பு என்று பொருளாகும்;

"பணிப்பாளர் தலைமையதிபதி" என்பது, 13 ஆம் பிரிவின்கீழ் குறிப்பீடுசெய்யப்பட்ட அதிகாரசபையின் பணிப்பாளர் தலைமையதிபதி என்று பொருளாகும்;

(3) "புறநீங்கலான பொருளாதார வலயம்" என்னும் சொல்லமைப்பின் வரைவிலக் கணத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய வரைவிலக்கணங்களை உட்புகுத்துவதன் மூலமும்:-

"அரசாங்க நிறுவனம்" என்பது, ஓர் அமைச்சு, அரசாங்கத் திணைக்களம், கூட்டுத்தாபனம், நியதிச்சட்டச் சபை, நியதிச்சட்ட அதிகாரசபை, மாகாண சபை, மாகாணத் திணைக்களம் அல்லது வேறேதேனும் மாகாண நிறுவனம், உள்ளூரதிகாரசபை அல்லது பகிரங்கக் கூட்டுத்தாபனம் அல்லது ஒரு கம்பெனி என்று பொருளாகும்;

"நிலநீர்" என்பது, மழையிலிருந்து தோன்று கின்றதும் நீர்த்தேக்கம், நீரூற்றுக்கள் மற்றும் கிணறுகளுக்கான நீர்மூலமா கவுள்ளதும் மண், மண்டி அல்லது பாறைக்கற்களிலுள்ள இடங்களை நிரப்புகின்றதும், நிலத்தின் மேற்பரப்பின் கீழ் சேர்கின்ற அல்லது ஓடுகின்றதுமான நீர் என்று பொருளாகும்; நிலநீரின் உயர்ந்த மேற்பரப்பு நீர்மேடையாக இருப்பதாகக் கணிக்கப்படுகின்றது;

"தீங்கு விளைவிக்கும் கழிவு" அல்லது "தீங்கு விளைவிக்கும் பதார்த்தங்கள்" என்பது, பொதுமக்களிள் சுகாதாரம், உயிருள்ள சேதனப்பொருட்கள், பொருட்கள், கட்டமைப்புகள் அல்லது சூழலுக்கு அபாயம் விளைவிக்கக்கூடியதும் திண்ம, பகுதியளவில் திண்ம, திரவ அல்லது வாயுத் தன்மையினதான வடிவத்திலானதுமான ஏதேனும் கழிவு என்று பொருளாகும்;

"கைத்தொழில் விபத்து" என்பது, இச்சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டவாறாகச் சூழலுக்குத் தீழ்ப்பை விளைவிக்கும் ஒரு விபத்து என்று பொருளாகும்;

"உள்நாட்டு நீர்ப்பரப்புகள்" என்பது, உள் நாட்டு மேற்பரப்பு நீர், நிலநீர் மற்றும் இலங்கையின் ஆள்புல நீர்ப்பரப்புகள் என்பவற்றை உள்ளடக்கும்; "

(4) "உள்ளூரதிகாரசபை" என்னும் சொல்லமைப் பின் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன் மூலமும்:-

"அமைச்சு" என்பது, சூழல் என்னும் விடயம் அரசியலமைப்பின்கீழ் எந்த அமைச்சுக் குக் குறித்தொதுக்கப்பட்டுள்ளதோ அந்த அமைச்சு என்று பொருளாகும்;

"கண்காணித்தல்" என்பது, வேறு உருவகங்களின் ஒருங்கிணைப்புடன் அல்லது அதன் நிபுணத்துவத்தினுள் அதிகாரசபையினால் பொறுப்பேற் கப்பட்டவொரு செயன்முறை என்று பொருளாகும் என்பதுடன் இயைபான அதிகாரிகளின் கலந்தாலோசனையுடன் இடச் சோதனை, நுண்ணாய்வு, பரீட்சித்தல், கூட்டங்களை நடாத்துதல், பதிவேடுகளைத் தொகுத்தலும் பேணுதலும், உடன்படிக்கைகளை வரைதலும் நிறைவேற்றுதலும் அல்லது புதுப்பித்தல் நடவடிக்கைமுறைகளைத் தயாரித்தல் என்பவற்றையும் உள்ளடக்கும்;"

(5) "இரைச்சல் தீழ்ப்பு" என்னும் சொல்லமைப் பின் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன்மூலமும்:-

"பொறுப்பாகவுள்ள ஆள்" என்பது, கவனிப்புக் கடமையை வேண்டுமென்று புறக்கணிக்கின்றமை காரணமாக ஏதேனும் தீழ்ப்பின் ஏதேனும் வெளி யேற்றுகையை, வெளிவிடுகையை

அல்லது படியவிடுதலை, அல்லது அறிந்துகொண்டு இலங்கையின் ஆள்புல எல்லைகளினுள் சூழலுக்கான சேதத்தை விளைவித்துள்ள ஏதேனும் செயற்பாட்டைப் பொறுப்பேற்றுள்ள, ஒன்றில் உள்நாட்டில் அல்லது வேறு வகையாகக் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்படாத ஓராள் அல்லது ஆட்கள் குழு என்று பொருளாகும்;

(6) "தீழ்ப்புக்காரணி" என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தில், "வாயுவாயினுஞ்சரி ஏதேனும் பதார்த்தம்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "வாயுவாயினுஞ்சரி அல்லது ஓர் எரிசக்தியாயினுஞ்சரி ஏதேனும் பதார்த்தம்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(7) "தீழ்ப்பு" என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தில்,"படியவிடுவதன்மூலம்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "படிய விடுவதன்மூலம் அல்லது நில அல்லது வான் அதிர்வின்மூலம்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(8) "விதித்துரைக்கப்பட்ட" என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய வரைவிலக்கணங்களை உட்புகுத்துவதன் மூலமும்:-

இடத்துக்குரிய தடைநீக்க அறிக்கை" என்பது, விதித்துரைக்கப்பட்ட செயற்பாட்டுக்காக உத்தேசிக்கப்பட்டவோர் இடமும் அதன் சுற்றுச் சூழலும் பொருத்தமானவையா அல்லாதவையாவெனச் சூழல்சார் கவனத்துட்கொள்கின்ற ஓர் ஆவணம் என்று பொருளாகும்;

"மூலோபாயச் சூழல்சார் மதிப்பீடு" என்பது, நிலைபெறுதகு அபிவிருத்தியை இலக்காகக் கொண்ட பொருளாதார மற்றும் சமூகக் கருத்துக்களுடன்

சேர்த்து ஒன்று திரண்ட விளைவு களைக் கவனத்துட்கொண்டு ஓர் உத்தேசிக்கப்பட்ட கொள்கை, மூலோபாயம், திட்டம் அல்லது நிகழ்ச்சித் திட்டத்தின் இயல்திற சூழல்சார் விளைவுகளை மதிப்பீடுசெய்வதற்கும் மற்றும் முடிபாக்கலின் இயன்றளவு முந்திய கட்டத்தில் அவற்றைத் தோதான முறையில் விளித் துரைப்பதற்குமான முறைமை சார்ந்தவொரு செயன்முறை என்று பொருளாகும்;

"மூலோபாயச் சூழல்சார் மதிப்பீட்டறிக்கை" என்பது, நிலைபெறுதகு மற்றும் தாங்குதிறன்கொண்ட அபிவிருத்தியை இலக்காகக்கொண்டு சூழலின்மீது அத்தகைய பாதகமான தாக்கங்களை ஒழிப்பதற்கு அல்லது குறைப்பதற்கு சூழல்நட்பு மாற்றுவழிகளின் அல்லது வழிமுறைகளின் பகுப்பாய்வொன்றுடன் சேர்த்து, வரைவுக் கொள்கை, மூலோபாயம், திட்டம் அல்லது நிகழ்ச்சித்திட்டத்தின் எதிர்வுகூறப்பட்ட குறிப்பிடத்தக்க சூழல்சார் விளைவுகளின் எழுத்திலானவொரு பகுப்பாய்வு என்று பொருளாகும்;"; அத்துடன்

(9) "நச்சுத்தன்மையான இரசாயனப் பொருள்" என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய வரைவிலக்கணங்களை உட்புகுத்துவதன்மூலமும்:-

"அதிர்வு" என்பது, திண்ம அல்லது திரவ ஊடகம் வழியாக அல்லது அதிர்ச்சி யலைகளைத் தோற்றுவிக்கின்ற காற்றுவழியாகச் செல்லும் நில அதிர் வலைகளைத் தோற்றுவிக்கும் நெகிழ்திறனுள்ள ஊடகமொன்றினது துகள்களின் ஒரு பருவகாலத்துக்கான

ஊசலாட்டம் அல்லது இயக்கம் எனப் பொருளாகும்;

"ஈரநிலங்கள்" என்பது, எந்தக் கடல்சார் இடப்பரப்பின் ஆழம் கடலின் வற்றத்தில் ஆறு மீற்றர்களை விஞ்சாதுள்ளதோ அந்தக் கடல்சார் நீர் இடப்பரப்பு உட்பட, தேங்கிநிற்கின்ற அல்லது ஓடுகின்ற, உவர்ப்பான அல்லது உப்புத்தன்மையான நீருடன், இயற்கையானதாயினுஞ்சரி, செயற்கையானதாயினுஞ் சரி, நிரந்தரமானதாயினுஞ்சரி தற்காலிகமானதாயினுஞ்சரி சதுப்பு நிலம், சேற்றுநிலம், சகதிநிலம் அல்லது நீரின் ஏதேனும் இடப்பரப்பு என்று பொருளாகும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள் உரை மேலோங்கி நிற்றல்

**42**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.